# அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை

**பாடம் 1**

## விசுவாச கட்டுரைகள்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை ........ 1**

**வரலாறு ........ 3**

- **வளர்ச்சி ........ 3**
- **நோக்கம் ........ 5**
  - வேதம் ........ 6
  - பாரம்பரிய போதனைகள் ........ 7
  - அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை ........ 12

**கண்ணோட்டம் ........ 15**

- **தேவன் ........ 15**
  - திரித்துவம் ........ 16
  - நபர்கள் ........ 19
- **சபை ........ 21**
  - பங்கேற்பு ........ 21
  - பாதுகாப்பு ........ 23
- **இரட்சிப்பு ........ 24**

**முக்கியத்துவம் ........ 27**

- **அடிப்படை காரியங்கள் ........ 28**
  - தரம் ........ 29
  - தர்க்க அடிப்படை ........ 32
- **உலகளாவிய தன்மை ........ 34**
  - புதிய ஏற்பாடு ........ 34
  - சபை வரலாறு ........ 36
  - நிகழ்காலம் ........ 38
- **ஒன்றிணைத்தல் ........ 40**

**முடிவுரை ........ 44**





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஒரு மரத்தை ஒரு மரமாக மாற்றுவது எது? அல்லது ஒரு வீட்டை வீடாக மாற்றுவது எது? அல்லது ஒரு மனிதனை மனிதனாக ஆக்குவது எது என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? அல்லது அதை வேறு விதத்தில் சொன்னால், நாம் ஒரு மரத்தை மரம் என்றோ ஒரு வீட்டை வீடு என்றோ அழைப்பதற்கு முன் என்ன குணங்கள் அவைகளில் இருக்க வேண்டும்? இத்தகைய சிக்கலான கேள்விகளைத் தான் தத்துவவாதிகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சிந்தித்து வருகின்றனர். கிறிஸ்தவ இறையியல் ஆய்வை அணுகும்போது இதேபோன்ற கேள்வியை எதிர்கொள்கிறோம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, எண்ணற்ற சபைகள் உள்ளன, அவைகள் அனைத்துமே ”கிறிஸ்தவ” சபைகளாக இருந்தாலும் பல சபைகள் பல விஷயங்களைப் பற்றி உடன்படாமல் தான் இருக்கின்றன. எனவே, “கிறிஸ்தவ இறையியலுக்கு எந்தக் கோட்பாடுகள் அடிப்படையாகவும் இன்றியமையாதவைகளாகவும் இருக்கின்றன?” என்று கேட்பது பயனுள்ளதாக இருக்கும்.

இப்போது, நிச்சயமாக, இந்த கேள்வியை நாம் கேட்கும் தருணத்தில், இறையியல் பற்றிய மிகக் குறைவான புரிதல் கொண்டிருக்கிற தனிநபர்கள் கூட இரட்சிக்கப்பட முடியும் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். கிறிஸ்துவிடம் நம்மை அர்ப்பணிப்பது நம்மை கிறிஸ்தவர்களாக்குவதற்கு போதுமானதாகும். அதே சமயம், எந்தவொரு இறையியல் அமைப்பிலும் ஏதாவது ஒன்றை “கிறிஸ்தவ” குணமுள்ளது என்று அழைக்கப்படுவதற்கு முன்னர் பல அத்தியாவசிய யோசனைகள் இருக்க வேண்டும் என்று சொல்வது நியாயமானது. சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளிலிருந்து, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* இந்த அடிப்படை நம்பிக்கைகளை பயனுள்ள விதத்தில் சுருக்கமாக வழங்கியுள்ளது.

கிறிஸ்தவர்கள் நம்புகிறவற்றின் நன்கு அறியப்பட்ட மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* சுருக்கம் பற்றிய நமது தொடரின் முதல் பாடம் இதுவாகும். இந்தப் பாடத்திற்கு விசுவாசக் கட்டுரைகள் என்ற தலைப்பை நாம் வைத்துள்ளோம், ஏனென்றால் தங்களை “கிறிஸ்தவர்” என்று அழைக்கும் அனைவராலும் உறுதிப்படுத்தப்பட வேண்டிய அறிக்கைகள் அல்லது கோட்பாடுகளின் சுருக்கமாக *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையைப்* பார்க்கப் போகிறோம். சபையின் ஆரம்ப நூற்றாண்டுகளில் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பல்வேறு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வடிவங்களில் இருந்தது. இது இலத்தீன் மொழியில், கி. பி. 700 இல் தரப்படுத்தப்பட்டது. ஒரு பிரபலமான நவீன ஆங்கில மொழிப்பெயர்ப்பு பின்வருமாறு கூறுகிறது:

> சர்வவல்லமையுள்ள பிதாவை நான் விசுவாசிக்கிறேன்.
> அவரே வானத்தையும் பூமியையும் படைத்தார்.
> அவருடைய ஒரே குமாரனும் நம் கர்த்தருமாகிய இயேசு
> கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன்.
> அவர் பரிசுத்த ஆவியினால் கர்ப்பம் தரிக்கப்பட்டு,
> கன்னி மரியாளுக்குப் பிறந்தார்.
> அவர் பொந்தியு பிலாத்துவின் கீழ் பாடு அனுபவித்து,
> சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டார்;
> அவர் பாதாளத்தில் இறங்கினார்.
> மூன்றாம் நாள் அவர் மரணத்திலிருந்து மீண்டும்
> உயிர்த்தெழுந்தார்.
> அவர் பரத்திற்கு ஏறினார்.
> சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது
> பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார்.
> அங்கிருந்து அவர் ஜீவனுள்ளவர்களையும்
> மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க வருவார்.
> நான் பரிசுத்த ஆவியானவரையும்,
> பரிசுத்த கத்தோலிக்க சபையையும்,
>
> பரிசுத்த வான்களின் ஐக்கியத்தையும்,
> பாவ மன்னிப்பையும்,
> சரீர உயிர்த்தெழுதலையும்,
> மற்றும் நித்திய ஜீவனையும் விசுவாசிக்கிறேன். ஆமென்.

விசுவாசக் கட்டுரைகளாக *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பற்றிய நம் விவாதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், விசுவாச அறிக்கையின் வரலாற்றைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, அதன் அறிக்கைகள் குறித்த பார்வையை நாம் வழங்குவோம். மூன்றாவதாக, அதன் கோட்பாடுகளின் இன்றைய முக்கியத்துவத்தில் கவனம் செலுத்துவோம். *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* பின்னணியில் உள்ள வரலாற்றிலிருந்து ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# வரலாறு

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* வரலாற்றை நாம் ஆய்வு செய்யும்போது, இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்துவோம். ஒருபுறம், விசுவாச அறிக்கையின் வளர்ச்சியைப் பார்ப்போம், அதன் எழுத்தாளர் மற்றும் தொகுக்கப்பட்ட தேதி போன்றவற்றைக் கருத்தில் கொள்வோம். மறுபுறம், விசுவாச பிரமாணத்தின் நோக்கத்தைப் பற்றிப் பார்ப்போம், மேலும் அதை உருவாக்குதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் என்னவென்று சபை நினைத்த காரணத்தைப் பார்ப்போம். முதலில் *விசுவாச அறிக்கையின்* வளர்ச்சியைப் பற்றிப் பார்ப்போம்.

## வளர்ச்சி

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* முதல் நூற்றாண்டில் பன்னிரண்டு அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டது என்று முன்பு நம்பப்பட்டு கற்பிக்கப்பட்டது. ஒவ்வொரு அப்போஸ்தலரும் விசுவாச அறிக்கையின் பன்னிரண்டு தனித்துவமான இறையியல் கூற்றுகளில் ஒன்றை பங்களித்ததாகக் கூட கூறப்பட்டது. இருப்பினும், இது நடந்தது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை, அல்லது எந்த அப்போஸ்தலர்களும் நேரடியாக விசுவாச அறிக்கையை எழுதுவதில் ஈடுபட்டனர் என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை. அப்போஸ்தலர்கள் விசுவாச அறிக்கையை எழுதவில்லை என்றால், யார் இதை எழுதினார்கள்?

> அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை யார் எழுதியது என்ற கேள்வி எழுகிறது, ஏனென்றால் நான் தான் எழுதினேன் என்று கையெழுத்திட்ட எழுத்தாளர் யாரும் இல்லை. இருந்தாலும், கிறிஸ்துவுக்கு நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்பிருந்தே ஞானஸ்நானம் எடுக்கப்போகிறவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளைப் போல இவை ஏறக்குறைய இருக்கின்றன. வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த பிதாவாகிய தேவனை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? என்று ஒருவர் கேட்கப்படுவார். தங்களுடைய ஞானஸ்நான அனுபவத்தைப் பற்றிப் பேசும் பலர் இந்த கேள்விகளில் பலவற்றை குறிப்பிடுவார்கள் என்பதால் இது நமக்குத் தெரியும். கி. பி. 200 இல், டெர்டுலியஸ் என்பவர் பழைய ரோம விசுவாச அறிக்கை என்று அழைக்கப்படுகிற ஒன்றை குறிப்பிடுகிறார், இது அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கைக்கு ஒத்ததாக இருக்கிறது, மேலும் அவர் ”நீங்கள் நம்புகிறீர்களா ...?” ”நீங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நம்புகிறீர்களா...?" என்கிற ஞானஸ்நான கேள்விகளின் அடிப்படையில் அவர் குறிப்பிடுகிறார். கி. பி. 390 இல் ரூஃபினஸ் என்பவர் தான் அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையைப் பற்றி முதலில் குறிப்பிட்டார், மேலும் யூதாஸுக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியாஸ் உட்பட பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒவ்வொருவரும் இந்த விசுவாச அறிக்கையில் ஒரு உறுதிமொழியைக் கொடுத்தனர் என்று குறிப்பிடுகிறார். அந்தக் கோட்பாட்டிற்கு உண்மையில் எந்த ஆதாரமும் இல்லை, ஆனால் உண்மையில், இந்த உறுதிமொழிகள் எல்லாம் அப்போஸ்தலர்களால் தான் உறுதிப்படுத்தப்பட்டவை என்பதற்கு நிச்சயமாக ஒரு அடிப்படை உள்ளது.

Dr. ஜான் ஆஸ்வால்ட்

ஆரம்பகால கிறிஸ்தவர்களின் எழுத்துக்களில், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* ஒத்திருக்கும் அடிப்படைக் கோட்பாடுகளின் பல பட்டியல்கள் உள்ளன. ஒருபுறம், அடிப்படை நம்பிக்கைகளை சில விபரங்களுடன் பட்டியலிட்டு விளக்கும் விசுவாச விதிகள் உள்ளன. விசுவாசக் கோட்பாடுகள் அவற்றை உருவாக்கிய சபைகளின் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளை சுருக்கமாகக் காட்டுவதாக ஆரம்பகால சபை பிதாக்களின் எழுத்துக்கள் குறிப்பிடுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரிகன் *ஆன் ஃபர்ஸ்ட் பிரின்சிபல்ஸ்* என்கிற தனது படைப்பின் தொடக்கத்தில், ஒரு விசுவாச விதியை உள்ளடக்கியிருந்தார், மற்றும் ஐரேனியஸ் தனது புகழ்பெற்ற படைப்பான *எகெய்ன்ஸ்ட் ஹெரஸிஸ்* என்கிற புத்தகத்தின் 1, 10 ஆம் அத்தியாயத்தில் ஒன்றைச் சேர்த்துள்ளார். இது போன்ற விசுவாச விதிகள் சபையின் போதனைகளை பாதுகாப்பதற்காகவே இருந்தன, மேலும் சபை விசுவாசிகளை – குறிப்பாக அதன் தலைவர்களுக்கு பயிற்சி அளிக்க பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலும், இந்த விதிகள் சபைக்கு சபை மாறுபட்டவைகளாக இருந்தன. பொதுவாக, அவை முக்கியமான கோட்பாடுகளின் உறுதிமொழிகளையும், தார்மீக போதனைகள் மற்றும் மரபுகளையும் உள்ளடக்கியவைகளாக இருந்தன.

மறுபுறம், சில பண்டைய உபதேசப் பட்டியல்கள் விசுவாச பிரமாணங்களின் வடிவத்தில் உள்ளன. சபையின் விசுவாச விதியின் கோட்பாட்டு பகுதிகளை, குறிப்பாக அதன் மிக முக்கியமான நம்பிக்கைகளை சுருக்கமாகக் கூறும் குறுகிய பட்டியல்கள் இவை. இவை பெரும்பாலும் ஞானஸ்நானம் போன்ற சடங்கு காரியங்களில் சொல்லப்பட்டன. முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில், ஒவ்வொரு உள்ளூர் சபையும் அதன் சொந்த விசுவாச அறிக்கையைக் கொண்டிருந்திருக்கலாம் அல்லது அடிப்படை வேதாகம சத்தியத்தின் சுருக்கத்தை குறிக்கலாம். ஆனால் மூன்றாவது அல்லது

நான்காம் நூற்றாண்டில், சில விசுவாச அறிக்கைகள் அதிக முக்கியத்துவம் பெற்றன மற்றும் பல சபைகளில் பயன்படுத்தப்பட்டன.

இந்த முறையில் முக்கியமான ஒரு பண்டைய விசுவாச அறிக்கை ரோமில் உள்ள சபையிலிருந்து வந்த அறிக்கையாகும், இது பெரும்பாலும் *ரோம விசுவாச அறிக்கை* என்று அழைக்கப்படுகிறது. இந்த விசுவாச அறிக்கை *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையுடன்* மிகவும் ஒத்திருக்கிறது, பல வேத அறிஞர்கள் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை ரோமானிய விசுவாச அறிக்கையின்* பிற்கால பதிப்பாக இருக்கலாம் என்று நம்புகிறார்கள். ஆனால் அது எவ்வாறு உருவானது என்கிற உண்மை தெரியாமலேயே இறுதியில் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பரவலான பயன்பாட்டிற்கு வந்தது, குறிப்பாக மேற்கத்திய சபைகளில் பயன்பாட்டிற்கு வந்தது. ஆரம்ப நூற்றாண்டுகளில், அதன் துல்லியமான சொற்கள் சபைக்கு சபை ஓரளவு மாறுபட்டன. ஆனால் எட்டாம் நூற்றாண்டில் இந்த நடை பொதுவாக இன்று நாம் அங்கீகரித்து பயன்படுத்தும் வடிவத்தில் தரப்படுத்தப்பட்டன.

விசுவாச அறிக்கை வரலாற்றில் அடைந்த இந்த வளர்ச்சியைப் பற்றிய புரிதலை மனதில் கொண்டு, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* உருவானதற்கும் அதன் பயன்பாட்டிற்கும் பின்னால் உள்ள நோக்கத்தை நாம் கவனிக்க வேண்டும்.

## நோக்கம்

நம் நாளில், பல கிறிஸ்தவர்கள் விசுவாச அறிக்கையைப் பற்றி சந்தேகப்படுகிறார்கள், அதற்கான காரணத்தை புரிந்துகொள்வது கடினம் அல்ல. இருந்தாலும் ஒரு விசுவாச அறிக்கைக்கு வேதத்தைப் போலவே அதிகாரம் உண்டு என்று மிகச் சிலரே வெளிப்படையாகக் கூறுகிறார்கள், சில விசுவாச அறிக்கைகள் வேதாகமத்திற்கு சமமாக இருந்தால் சில சமயங்களில் நல்ல விவரம் தெரிந்த கிறிஸ்தவர்கள் அவைகளை நல்ல விதத்தில் எடுத்துகொள்கிறார்கள். ஆனால் எந்தவொரு விசுவாச அறிக்கையும் ஒருபோதும் கோட்பாட்டிலோ அல்லது நடைமுறையிலோ ஒரு குறிப்பிட்ட நிலைக்கு மேல் உயர்த்தப்படக்கூடாது.

நம்முடைய விசுவாசம் மற்றும் நடைமுறை வாழ்க்கைக்கு ஆவியானவரால் நமக்கு அருளப்பட்ட ஒரே தவறாத விதி வேதம் மட்டுமே. மறுபுறம், விசுவாச அறிக்கைகள் வேதத்தை நமக்கு சுருக்கமாக புரிய வைக்கக்கூடிய பிழையுள்ள கற்பித்தலுக்கான கருவிகள் ஆகும். நாம் பார்க்கவிருப்பதைப் போல *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* கிறிஸ்தவர்கள் வேதாகமத்தின் போதனைகளைக் கற்றுக்கொள்வதற்கும் உண்மையாக வாழ்வதற்கும் உதவும் வகையில் உருவாக்கப்பட்டது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* நோக்கத்தை மூன்று படிகளில் ஆராய்வோம். முதலில், வேதத்தை உண்மையான கோட்பாட்டின் அசல் களஞ்சியமாக பார்ப்போம். இரண்டாவதாக, சபைகளின் பாரம்பரிய போதனைகளை வேதத்தின் உறுதிப்படுத்தல்களாகப் பார்ப்போம். மேலும் மூன்றாவதாக, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* என்பது சபைகளின் பாரம்பரிய வேதவசன புரிதல்களைச் சுருக்கமாகக் கூறும் நோக்கத்தைக் கொண்டிருந்தது என்பதைப் பார்ப்போம். அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவர்கள் வேதவாக்கியமே நமது கோட்பாட்டின் அடிப்படை என்பதை எப்போதும் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள் என்கிற உண்மையின் அடிப்படையில் நாம் தொடங்கலாம்.

## வேதம்

மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்ட *ஆன் பர்ஸ்ட் பிரின்சிபில்ஸ்* என்கிற புத்தகத்தின் முன்னுரையில் ஆரம்பகால சபையின் பிதாவான ஒரிகன் எழுதின வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> விசுவாசிக்கிற அனைவரும் … மனிதர்களை நல்ல மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்குத் தூண்டும் அறிவை கிறிஸ்துவின் சொற்களிலிருந்தும் போதனைகளிலிருந்துமே தவிர வேறு எந்த மூலத்திலிருந்தும் பெறுவதில்லை. அவர் மனுவுரு எடுத்த போது பேசியதை மட்டும் நாம் அவருடைய வார்த்தைகளாக எடுத்துக்கொள்ளவில்லை … அதற்கு முன்பே, தேவனுடைய வார்த்தையான கிறிஸ்து மோசேயிலும் தீர்க்கதரிசிகளிலும் இருந்தார் ..மேலும் … பரமேறிய பிறகு அவர் அப்போஸ்தலர்களின் மூலம் பேசினார்.

வேதம் அதன் எல்லா பகுதிகளிலும் கிறிஸ்துவின் வார்த்தை என்றும், அது எல்லா உண்மையான உபதேசங்களுக்கும் ஆதாரம் என்றும் ஒரிகன் கற்பித்தார். மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த பிஷப் ஹிப்போலிட்டஸின் *எகைய்ன்ஸ்ட் தி ஹெரஸி ஆப் ஒன் நோடஸ்* என்கிற அவரது படைப்பின் 9 வது பிரிவில் உள்ள வார்த்தைகளைக் கேளுங்கள்:

> சகோதரரே, ஒரே தேவன் தான் இருக்கிறார், பரிசுத்த வேதாகமத்தின் மூலம் நாம் அவரைப் பற்றி அறிகிறோம், வேறு எந்த மூலத்திலும் இருந்து அவரைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடியாது.

ஆரம்பகால சபைகள் முழு வேதாகமமும் கிறிஸ்துவின் வார்த்தை என்றும், விசுவாசிகளுக்கு அப்போஸ்தலர்களால் வழங்கப்பட்டது என்றும் நம்பின. இது சம்பந்தமாக, இறையியலாளர்கள் பெரும்பாலும் *சோலா*

*ஸ்கிரிப்சரா* அல்லது வேதம் மட்டுமே என்று அழைக்கிறார்கள் என்ற கருத்தை அவர்கள் உறுதிப்படுத்தினர். இந்த முன்னோக்குதான் வேதவசனம் என்பது விசுவாசத்தின் ஒரே பிழையில்லா விதி என்றும் எந்தவொரு இறையியல் சர்ச்சையிலும் இறுதி நடுவர் என்றும் அழைக்கப்படுவதன் காரணம் ஆகும்.

கி. பி. 370 இல் செசரியாவின் கண்காணியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பேசிலின் எழுத்துக்களில் இதற்கு ஒரு தெளிவான உதாரணத்தைக் காணலாம். பேசில் சபையின் மரபுகள் அல்லது பழக்கவழக்கங்களின் வலுவான பாதுகாவலராக இருந்தார், மேலும் இந்த மரபுகளை அப்போஸ்தலர்களிடம் காணலாம் என்று அடிக்கடி தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இருந்தாலும், இந்த மரபுகளின் உண்மைத்தன்மை பற்றி ஒரு கேள்வி எழுந்தபோது, அவர் வேதத்தைத் தான் இறுதி அதிகாரமாகக் கோரினார். யூஸ்டாதியஸ் என்னும் மருத்துவருக்கு எழுதிய *கடிதம் 189* இல் பேசில் என்பவர் எழுதிய வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> தேவனால் அருளப்பட்ட வேதம் நமக்கு இடையே தீர்மானிக்கட்டும்; எந்தப் பக்கத்தில் தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப்போகும் உபதேசங்கள் காணப்படுகின்றனவோ, அந்த பக்கத்திற்கு ஆதரவாக சத்திய வாக்களிக்கப்படும்.

இங்கே சில சபைகள் தங்கள் விசுவாச விதியில் ஒரு வழக்கமான கருத்துக்களைக் கொண்டிருந்ததாக பேசில் ஒப்புக்கொண்டார், மற்ற சபைகள் வேறுவிதமான பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்தன. எனவே, இந்த பிரச்சனையைத் தீர்ப்பதற்கான மிக உயர்ந்த அதிகாரமாக அவர் வேதத்திற்கு வேண்டுகோள் விடுத்தார்.

ஆரம்பகால சபை அதன் அனைத்து உபதேசங்களுக்கும் அடிப்படையாக வேதத்தை வலுவாக நம்பியது. ஆனால் வேதத்தின் போதனைகளை சுருக்கமாக வைக்கவும் பாதுகாக்கவும் அவர்கள் சபையின் பாரம்பரிய போதனைகளை சார்ந்திருந்தார்கள்.

## பாரம்பரிய போதனைகள்

தன் பாரம்பரிய போதனைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை சபை ஏன் உணர்ந்தது என்று ஆச்சரியப்படுவது நியாயமானதே. வேதாகமத்தைப் பாதுகாப்பதும், வேதத்தை தானே பேச விடுவதும் போதுமானதாக இல்லையா?

> சரி, குறிப்பாக அப்போஸ்தலர்கள் கற்பித்தவற்றிற்கும் வேதம் கற்பிக்கும் விஷயங்களுக்கும் பொருந்தாத விஷயங்களை கற்பிக்கும் கள்ள போதகர்கள் இருப்பதால் சபை என்ன நம்புகிறது என்பதில் சுருக்கமான, தெளிவான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அறிக்கைகளை வகுக்க வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, குறிப்பாக இந்த தவறான போதனைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, சபை விசுவாசிக்கிற தெளிவான சுருக்க அறிக்கையை வகுக்க வேண்டியிருந்தது.

Dr. கே. எரிக் தோனேஸ்

விசுவாசத்தின் அடிப்படையிலான வேதவாக்கியங்களை சபை கொண்டிருந்தது, ஆனால் உண்மையில், வேதவாக்கியங்கள் மிக நீண்டதாகவும், அதனுடைய மொழியியல் செழுமை வரம்புக்குட்பட்டதாகவும் இருந்தது. ஆகவே, முழு வேதாகமத்தையும் வாசிக்காமலேயே, ஜனங்கள் விசுவாசத்தை உணர்ந்துகொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் அடிப்படை உபதேசங்களை ஒற்றை விசுவாச அறிக்கையில் சுருக்கப்படுத்துவது சபைக்குச் சிறந்ததாக இருந்தது.

Dr. ரியாட் காசிஸ், மொழிப்பெயர்ப்பு

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* விசேஷித்த வகையில் மதிப்புமிக்கது, ஆதி சபை வரலாற்றில் கூட அவசியமானதாயிருந்தது, ஏனென்றால் கி. பி. 397 வரை எவையெல்லாம் தேவனால் கொடுக்கப்பட்ட புத்தகங்கள் என்கிற பட்டியல் முழுமையானதாக இல்லை. அப்படியிருக்க, சபையினுடைய அதிகாரப்பூர்வ விசுவாசம் என்னவாக இருந்தது? இது அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில் சுருக்கமாக கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த சமயத்தில் நம்மிடத்தில் வேதாகமம் இருந்தது. அப்படியானால், நமக்கு ஏன் விசுவாச அறிக்கை தொடர்ந்து தேவைப்பட்டது? ஏனென்றால், நாம் ஜனங்களைக் கிறிஸ்தவர்களாக ஏற்றுக்கொள்வதற்கு முன்பு அவர்கள் முழு வேதாகமத்தையும் புரிந்துகொள்ள வேண்டும் என்று கோர முடியாது. அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையானது வேதாகமத்தினுடைய அவசியமான போதனைகளை எளிமையான வழியில் சுருக்கிக்கூறுகிறது. மேலும் இதன் காரணமாக, இது இப்பொழுதும்கூட, தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

Dr. பவுல் சாங், மொழிப்பெயர்ப்பு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கள்ள போதகர்கள் சபைகளில் அநேக பிரச்சனைகளை உருவாக்கினார்கள். சிலர் சுவிசேஷத்தினுடைய மைய அம்சங்களை மறுதலிக்கவும் செய்தனர். இந்த சூழலை சரியாக அணுகும் விதமாக, தேவபக்தியுள்ள கிறிஸ்தவத் தலைவர்கள், வேதவாக்கியங்களினுடைய மையப் போதனைகளை சுருக்கமாக உருவாக்கினார்கள், அதனால் விசுவாசத்தின் அடிப்படை உள்ளடக்கங்களை கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்வார்கள் மற்றும் உறுதிப்படுத்துவார்கள். ஒரிகன் என்பவர் அவருடைய *ஆன் பர்ஸ்ட் பிரின்சிபில்ஸ்* என்ற படைப்பின் முகவுரையில், இந்த பிரச்சினைகளை விவரிக்கும் வழிகளைக் கவனிக்கவும்.

> அநேகர் தாங்கள் கிறிஸ்துவின் அபிப்பிராயங்களை பற்றிக்கொண்டிருப்பதாக எண்ணிக்கொள்கிறார்கள் மற்றும் இவர்களில் சிலர் தங்களுடைய முன்னோர்களினின்று வித்தியாசமாக எண்ணுகிறார்கள், இருப்பினும் சபையினுடைய போதனையானது அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து முறையாகப் பரப்பப்பட்டது, மற்றும் சபைகளில் இந்நாள்வரையிலும் நிலைத்துநிற்கிறது, இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது, அது மட்டுமே சத்தியமானது என்று ஏற்றுக்கொள்ளப்படவேண்டும், இது அப்போஸ்தலர்கள் சம்பந்தப்பட்ட பாரம்பரியம் மற்றும் சபை சம்பந்தப்பட்ட பாரம்பரியத்திலிருந்து வேறுபடுவதில்லை.

இங்கே ஒரிகன் என்ன கூறினார் என்பதைக் கவனிக்கவும். சபையினுடைய போதனைகள் தவறில்லாதது என்றோ அல்லது இது தான் எப்பொழுதும் பரிபூரணமானதாக இருக்கும் என்றோ அவர் கூறவில்லை. மாறாக, சபையினுடைய போதனைகள் உண்மையானது என்று ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கூறினார். ஏனென்றால் அப்போஸ்தலர்களிடமிருந்து தன் காலகட்டம் வரை முறையாகவும் தொடர்ச்சியாகவும் பரப்பப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்தது என்று ஒரிகன் கூறினார். வேறு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால், ஒரிகனுடைய நாட்களில், சபையினுடைய போதனையானது வேதவாக்கியத்தில் சொல்லப்பட்டுள்ள கிறிஸ்துவின் வார்த்தைகளினுடைய துல்லியமான சுருக்கம் ஆகும். மேலும் இதன் காரணமாக, ஒரிகனுடைய நாட்களில் சபையானது, உபதேசங்களைச் சோதித்துப் பார்ப்பதற்கு, இதனை "விசுவாசத்தின் விதியாக" அல்லது "தரமாக" பயன்படுத்த முடிந்தது. ஆனால், இறுதி அதிகாரம், அந்தக் கால சபையில் இல்லாமல் புதிய ஏற்பாட்டில் இருந்தது.

நாம் இந்த யோசனையை பல இணைப்புகளாலான சங்கிலியுடன் ஒப்புமைப்படுத்தி விளக்கலாம். ஆதி சபையானது, வேதவாக்கியத்தில் காணப்படும் கிறிஸ்துவினுடைய போதனைகளை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க விரும்பியது. இது கிறிஸ்துவை முதல் இணைப்பாக ஆக்கியது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுடன் நேரடியான தொடர்பு கொண்டிருந்தனர், மற்றும் அவரால் நேரடியாகப் போதிக்கப்பட்டிருந்தனர். ஆகவே, அவர்களுடைய போதனைகள் இந்த சங்கிலியின் இரண்டாம் இணைப்பு ஆகும். அதைத் தொடர்ந்து, அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவைக் குறித்த அவர்களுடைய ஞானத்தை வேதவாக்கியத்தில் பாதுகாத்தனர், இது வேதவாக்கியத்தை இந்த சங்கிலியின் மூன்றாவது இணைப்பாக உருவாக்கியது. இந்த மூன்று இணைப்புகளும் பூரணமானதும், தவறற்றதுமாகக் காணப்பட்டது, ஏனென்றால், பரிசுத்த ஆவியானவரால் இது கண்காணிக்கப்பட்டது.

ஆனால், நான்காவது இணைப்பாகிய, சபையினுடைய பாரம்பரிய போதனைகள் வித்தியாசமானது. இந்த மரபுகளின் பரிமாற்றம் தவறற்றது அல்ல; அவைகள் பிழையில்லாதது என்று பரிசுத்த ஆவியானவர் உத்திரவாதம் செய்யவில்லை. உண்மையில், நாம் ஏற்கனவே பார்த்ததின்படி, சில சபைகளினுடைய மரபுகள், மற்ற சபைகளினுடைய மரபுகளுக்கு முரண்பட்டதாய் காணப்பட்டது.

இந்த போதனைகளில் சில நடைமுறையில் சிறிய விஷயங்களுடன் தொடர்புடையவையாக இருந்தன – அதாவது வேதவாக்கியத்தில் நேரடியாக கூறப்படாத விஷயங்களாக இருந்தன. ஆனால் மற்ற பாரம்பரியங்கள், மூல அர்த்தத்தை சுருக்கமாகக் கூறின. விசேஷமாக, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பட்டியலிடப்பட்டுள்ள விசுவாசத்தின் முக்கிய விதிகள் போன்றவை.

இது மைய நம்பிக்கைகளுக்கு வரும்போது, சபைத் தலைவர்களால் பல இடங்களில், காலங்காலமாக இந்த பாரம்பரியங்கள் உறுதிப்படுத்தப்பட்டு வந்தன. அதுமட்டுமல்லாமல், அவைகள் வேதத்துடன் நேரடியாக மேற்கோள் காட்டப்பட்டு சரிபார்க்கப்பட முடியும். இதன் காரணமாகவே, சபையினுடைய பாரம்பரியப் போதனைகளை, விசுவாச விதிகளாக அமைப்பதில் ஒரிகன் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

இருப்பினும், இந்த இணைப்பு தவறற்றது அல்ல. சபையும், அதனுடைய ஆலோசனை சபைகளும், மற்றும் கிறிஸ்தவர்களாகிய தனி நபர்களும் இதனைப் பொறுத்து தவறு செய்வதற்கு எப்பொழுதும் வாய்ப்பு இருந்தது. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கார்த்தேஜை சார்ந்த ஆயராகிய சைப்ரியன் என்பவர் அவருடைய படைப்பாகிய *நிருபம் 73* இல் ரோமைச் சார்ந்த ஆயராகிய ஸ்டீபன் கொண்டிருந்த உபதேசங்களுக்கு எதிராக எழுதிய வார்த்தைகளைக் கவனிக்கவும்:

> சத்தியமானது பரவுவதையும், வெற்றி பெறுவதையும் தடுப்பதற்கு, சிலரிடம் ஊடுருவியிருக்கும் மரபினால் இயலாது; சத்தியம் இல்லாத மரபு தவறுகளின் பழமை எனப்படும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சைப்ரியன் என்பவருடைய கருத்து என்னவென்றால், சில பழமையான கிறிஸ்தவப் பார்வைகளும், நடைமுறைகளும், அப்போஸ்தலர்களிடமிருந்து நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சத்தியத்தில் வேரூன்றப்படவில்லை. பதிலாக, அவைகள் “பிழைகளின் பழமையாக” இருந்தன – நீண்ட காலத்திற்கு முன்பதாக சபைக்குள் ஊடுருவிக் காணப்பட்ட பிழைகள் ஆகும். உண்மையில், மனிதனுடைய தவறு செய்யும் இயல்பாகிய, இந்த பிரச்சினையானது, சபை கவனமாக விசுவாசத்தினுடைய விதிகளை எழுத்து வடிவில் பதிவு செய்வதற்கு முக்கியமானதாக உருவாயிற்று. ஒரிகன் மற்றும் பிற ஆதி சபை பிதாக்கள், உலகமெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் அவர்களுடைய உபதேசங்களை பாரம்பரியங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க ஏதுவாக இருக்கும் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள, சபையினுடைய விசுவாச விதிகளை எழுதினார்கள். வெவ்வேறு இடங்களிலும், காலங்களிலும் காணப்படும் கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய தீர்ப்புகள் தெரிவிக்கப்படும் என்பதற்காக, ஆலோசனை சபைகளும் பாரம்பரிய போதனைகளை பதிவுசெய்தன.

எல்லா சூழ்நிலைகளிலும், சபையினுடைய பாரம்பரியப் போதனைகளைப் பாதுகாக்க வேண்டியதன் குறிக்கோள் என்பது சபையானது வேதவாக்கியத்தின் மூல அர்த்தத்திலிருந்து விலகிச் செல்லாமல் இருப்பதை உறுதி செய்வதாக இருந்தது, அப்பொழுதுதான் விசுவாசிகள் அப்போஸ்தலர்களினுடைய போதனைகளைச் சரியாகப் புரிந்துகொள்வார்கள், அப்பொழுதுதான் கிறிஸ்துவினுடைய வார்த்தைகளை உறுதியாகக் கைக்கொண்டு அதன்படி வாழ்வார்கள்.

> வேதாகமம் மிகப் பெரிய புத்தகம், மற்றும் ஒரு அர்த்தத்தில் மட்டும் தனக்காக பேச விடுவதை உங்களால் அனுமதிக்க முடியாது. அதற்குரிய நல்ல சுருக்கத்தை நீங்கள் வழங்க வேண்டியது அவசியமாகிறது. கிறிஸ்து யார் என்பதைக் குறித்த உபதேசங்களுக்கு முக்கிய சவால்கள் கூட புதிய ஏற்பாட்டிற்குள் காணப்படுகிறது. மேலும், அப்போஸ்தலர்கள் விவாதம்செய்து “இல்லை, இது தான் சத்தியம்” என்று கூறியிருப்பதை உங்களால் காண முடியும். மேலும் அந்த பிரச்சினையானது கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரையிலும் தொடர்ந்தது. சில முக்கிய சவால்களாக, வேதாகமத்தின் இயல்பு மற்றும் இயேசு யார் போன்ற கோட்பாடுகள் காணப்படுகின்றன. அதனால், வேதாகமத்தின் அடிப்படை நம்பிக்கைகளை இன்னும் சிறப்பாகவும், குறுகிய வடிவிலும் அவர்களால் இயன்ற வரையில் சுருக்கப்படுத்தினார்கள். மேலும் அது அப்போஸ்தலர்களுடைய விசுவாச அறிக்கைக்கு ஒரு எழுச்சியைக் கொடுத்தது. முக்கியமான விஷயமாக இங்கே நினைவுகூற வேண்டியது என்னவென்றால், அவர்கள்

> வேதாகமத்துடன் கூடுதலாக எதையும் சேர்க்க முற்படவில்லை, வேதாகமத்தின் காரியங்களைத் தெளிவுபடுத்தவும், அதனுடைய அர்த்தத்தை வெளிக் கொணரவும் முயன்றார்கள்.
>
> Dr. பீட்டர் வாக்கர்

*பரிசுத்த ஆவியானவரின் கிரியை* என்கிற புத்தகத்தில் கி. பி. 374 இல் பேசில் இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> நம் பிதாக்கள் என்ன சொன்னார்களோ, அதையே நாமும் சொல்கிறோம் … ஆனால், நம் பிதாக்களின் பாரம்பரியம் என்பதற்காக மட்டும் நாம் அவைகளை நம்பவில்லை; அவைகளிலும் வேதத்தின் உணர்வு காணப்படுகிறது.

இதனுடைய பாரம்பரிய போதனைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, ஆதி சபையானது சிறிய உபதேசக் கருத்து வேறுபாடுகளைப் பற்றிப் பெரிதும் கவலைப்படவில்லை என்பதை நாம் இங்கே குறிப்பிடவேண்டும். அவர்கள் மையமானதும், அடிப்படையானதுமான நம்பிக்கைகள் மற்றும் செயல்கள் மீது கவனம் செலுத்தி வந்தனர். இது அவர்களுடைய எழுத்துக்களில் அவர்கள் முன்வைத்த வாதங்களிலிருந்தும், அவர்கள் எழுதிய விசுவாச விதிகளில் பட்டியலிடப்பட்டுள்ள காரியங்களிலிருந்தும் தெளிவாகிறது.

எடுத்துக்காட்டாக, அவர்கள், கிறிஸ்துவினுடைய மனிதத்தன்மையை மறுத்தவர்களான, இயேசுவுக்கு சரீரம் இல்லை என்று போதிக்கிற கோட்பாட்டைப் பின்பற்றுகிறவர்களுக்கு எதிராக எழுதினார்கள். அவர்கள், பழைய ஏற்பாட்டினுடைய தேவன் தீமையானவர் என்று நம்புகிறவர்களும், அனைத்து விதமான மாம்சீக பாவங்களைச் செய்வதற்கு உரிமைபாராட்டுபவர்களுமான ஞானவாதத்தைப் பின்பற்றுகிறவர்களுக்கு எதிராக எழுதினார்கள். மேலும் வேதவாக்கியத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு சவாலாக விளங்கிய மற்ற பல கள்ள போதனைகளுக்கு எதிராக அவர்கள் எழுதினார்கள்.

வேதவாக்கியம் மற்றும் சபையினுடைய பாரம்பரிய போதனைகள் பற்றி பேசிய வண்ணமாக, தனிப்பட்ட விசுவாசிகளுக்காக சபையினுடைய பாரம்பரியப் போதனைகளை *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* எவ்வாறு சுருக்கப்படுத்தியிருக்கிறது என்பதைப் பார்க்க நாம் தயாராக உள்ளோம்.

## அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை

வேதாகமத்தின் அடிப்படையான போதனைகளை புதிய கிறிஸ்தவர்கள் விசுவாசித்தார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக *அப்போஸ்தலர்களின்*

*விசுவாச அறிக்கை* பெருமளவில் பயன்படுத்தப்பட்டது என்பதை நாம் பார்த்தோம். அதிகமாக அதைப்போன்றே, நவீன சபைகள் புதிய விசுவாசிகளை வேத பாடங்கள் மற்றும் வகுப்புகள் வழியாக சீஷர்களாக மாற்றுகின்றன, விசுவாசத்தின் அடிப்படைகளில் புதிய விசுவாசிகளை பயிற்றுவிப்பதற்கு விசுவாச அறிக்கையை ஆதி சபை பயன்படுத்தியது.

கி. பி. 354 முதல் 430 வரை வாழ்ந்தவரும், ஹிப்போவின் பிரபலமான பேராயராக இருந்தவருமான அகஸ்டின் என்பவர் ஞானஸ்நானம் எடுப்பதற்காக ஆயத்தமாகிக்கொண்டிருந்த புதிய விசுவாசிகளுக்கான பிரசங்கத்தில் விசுவாச அறிக்கையின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாகச் சொல்லியிருந்தார். இந்த பிரசங்கத்தில், அவர் தனது சிந்தையில் நேரடியாகக் கொண்டிருந்த விசுவாச அறிக்கையானது *நிசியா விசுவாச அறிக்கையாகும்*, ஆனால் அவருடைய வார்த்தைகள், சபையினுடைய முந்தைய நூற்றாண்டுகளில் காணப்பட்ட எல்லா விதமான விசுவாச அறிக்கையினுடைய நோக்கத்தையும் பயன்பாட்டையும் சரியாக சுருக்கிக் கூறுகிறது. ஞானஸ்நானம் எடுப்பதற்காக ஆயத்தமாகிக்கொண்டிருந்த புதிய விசுவாசிகளுக்கான பிரசங்கம் ஒன்றில்: விசுவாச அறிக்கையைக் குறித்து, அகஸ்டின் இவ்வாறு எழுதினார்:

> நீங்கள் கேள்விப்படுகிற இந்த வார்த்தைகள் தெய்வீக வேதவாக்கியங்களில் மேலும் கீழுமாக சிதறியிருக்கின்றன: மெதுவாக புரிந்து கொள்ளும் நபர்களினுடைய நினைவாற்றல் சிரமப்படக்கூடாது என்பதற்காகவும் ஒவ்வொரு நபரும் அவர்கள் விசுவாசிப்பதைச் சொல்லவும், அதை உறுதியாய்ப் பிடித்துக்கொள்ளவும் முடியும்படிக்கும் அவைகள் சேர்க்கப்பட்டு ஒன்றாக சுருக்கப்பட்டிருக்கின்றன.

அகஸ்டின் இங்கே சுட்டிக்காட்டியதுபோல, கிறிஸ்தவத்தினுடைய மைய போதனைகள் வேதவாக்கியத்தில் இங்கும் அங்குமாக சிதறிக் காணப்படுகின்றன. அதனால், ஆதி சபைகள் வேதவாக்கியத்தினுடைய மையப் போதனைகளை விசுவாச அறிக்கைகளில் சுருக்கின. இது ஒவ்வொரு விசுவாசியும் – “மெதுவான” என்று அவர் கூறிய நபர்கள் அல்லது எழுத்தறிவில்லாத நபர்கள் கூட – வேதவாக்கியத்தினுடைய அடிப்படை போதனைகளை நிலையாக பற்றிக்கொள்ளவும் அதில் உறுதியாயிருக்கவும் முடியும் என்பதை நிச்சயப்படுத்தியது.

உண்மையிலேயே, பல சபைகள் வெவ்வேறு விசுவாச அறிக்கையைக் கொண்டிருந்ததால், அவர்களுடைய நம்பிக்கையின் மீது வெவ்வேறு குறைந்தபட்ச தரங்களைக்கொண்டிருந்தார்கள் என்ற ஒரு உணர்வு அங்கே இருந்தது. சில சபைகளுக்கு புதிய விசுவாசிகளின் தரப்பிலிருந்து போதுமான புரிதல் தேவையில்லை, அதே வேளையில் மற்ற சபைகள் உண்மையான விசுவாசம் உடைய ஆனால் மேம்பட்ட இறையியல் அறிவு இல்லாத

விசுவாசிகளை விலக்கினர். இதன் விளைவாக, ஒரு நபர், ஒரு விசுவாசியாக சில சபைகளில் தகுதி பெற முடியும், மற்ற சபைகளில் தகுதி பெற முடியாது. இந்த ஏற்றத்தாழ்வின் வெளிச்சத்தில், தன்னை கிறிஸ்தவர்கள் என்று அழைக்கும் ஒவ்வொரு சபைக்கும், ஏற்றுக்கொள்வதற்குகந்த ஒரு விசுவாச அறிக்கை தேவை என்பதை ஆரம்பகால சபைகள் கண்டுணர்ந்தார்கள்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது,* இந்த தேவையை நிறைவேற்றும் பொருட்டு முக்கியத்துவம் வாய்ந்ததாக எழும்பிற்று. இது கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற எல்லோராலும் புரிந்துகொள்ளப்படக்கூடியதும், புரிந்துகொள்ளப்பட வேண்டியதுமான ஒரு குறுகிய, நேரடியான அறிக்கையாகும்.

> அப்போஸ்தலர்களின் அறிக்கை என்பது உண்மையில் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தினுடைய ஒரு கதைச் சுருக்கம் ஆகும். மேலும் வேதாகமத்தினுடைய ஒவ்வொரு வார்த்தையும் பிழையற்றதும், தவறாததுமான தேவனுடைய வார்த்தை என்று நாம் விசுவாசித்தாலும் கூட, சுவிசேஷத்தினுடைய சாராம்சம் என்ன என்பதை ஜனங்கள் புரிந்துகொள்ளும்படியாக உதவுவதற்கு ஒரு சுருக்க உரை நமக்குத் தேவையாயிருக்கிறது என்ற உண்மையை இது சுட்டிக்காட்டுகிறது. அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை என்பது கிறிஸ்தவ பாரம்பரியத்தின் ஆரம்பத்தில் இருந்து வெளிவந்து, விசுவாசத்தின் சாராம்சம் குறித்து கிறிஸ்துவின் வெளிப்பாட்டின் அடிப்படையில் அப்போஸ்தலர்கள் கற்பித்ததின் சுருக்கவுரையை உள்ளடக்கியதாகும். “நான் விசுவாசிக்கிறேன்.” அனைத்தும் அதிலிருந்து உருவாகிறது. அதனால், இங்கே முக்கியமான விஷயம் என்னவென்றால், நாம் சுவிசேஷத்தைச் சொல்வதற்குத் தேவையான அனைத்தையும் சொல்வதற்கு அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கை நமக்கு உதவுகிறது.
>
> Dr. ஆர். ஆல்பர்ட் மோஹ்லர், Jr.

இப்பொழுது நாம் *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையினுடைய* வரலாற்றைப் பேசிக்கொண்டோம், இதனுடைய உறுதிப்பாட்டின் கண்ணோட்டத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறதான இந்த பெரிய வரைபடம் போன்ற காரியமானது, சபையினுடைய ஆரம்ப நூற்றாண்டுகளில் காணப்பட்டதுபோல பயனுள்ளதாக இன்றும் காணப்படுகிறது.

# கண்ணோட்டம்

பல வருடங்களாக, இறையியலாளர்கள் *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையின்* உள்ளடக்கத்தைப் பல வழிகளில் விவரித்தனர். இந்தப் பாடத்தில், விசுவாச கட்டுரைகளுடைய விசுவாச அறிக்கைகளை மூன்று பார்வையுடன் அணுகுவோம். முதலாவது, தேவனைப் பற்றிய உபதேசத்தைக் குறித்து உரையாற்றுவோம். இரண்டாவது, சபையைப் பற்றிப் பேசுவோம். மற்றும் மூன்றாவது, இரட்சிப்பு என்னும் தலைப்பின் கீழ் உரையாற்றுவோம். *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையில்* தேவனைப் பற்றிய உபதேசத்துடன் துவங்குவோம்.

## தேவன்

> தேவனைப் பற்றிய கோட்பாடு நமது கிறிஸ்தவ இறையியலின் அடிப்படையிலும், நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையிலும், நமது கிறிஸ்தவ நடைமுறையின் அடிப்படையிலும் நாம் என்னவெல்லாம் சொல்கிறோமோ அவை அனைத்திற்கும் முழு அடிப்படையாக இருக்கிறது… நாம் நம்மையும் உலகத்தையும் நம் அர்த்தத்தையும் நோக்கத்தையும் எப்படி புரிந்துகொள்கிறோம் என்பதன் அடிப்படையில் நமக்கிருக்கிற எல்லாம் தேவன் யார் என்கிற உண்மைக்கே செல்கிறது … ஒவ்வொரு கிறிஸ்தவ கோட்பாடும் அது இரட்சிப்பாக இருந்தாலும், சபையாக இருந்தாலும், எதிர்காலத்தின் அடிப்படையில் கடைசி காரியங்களாக இருந்தாலும், இருக்கிறவரும் திரியேகனுமாயுள்ள தேவனில் வேரூன்றியுள்ளன. இந்த வாழ்க்கையில் நம்முடைய நம்பிக்கை முழுவதும், நாம் சிந்திக்கிறதான நம்முடைய இரட்சிப்பு மற்றும் பாவங்களுக்கான மன்னிப்பு அனைத்தும் இவை எல்லாவற்றையும் திட்டமிட்டவரும், தம்முடைய சித்தத்தையும் நோக்கத்தையும் கொண்டுவந்தவரும், தம்முடைய திட்டத்தை நிறைவேற்றி முடிவுக்குக் கொண்டுவருகிறவருமான தேவனுக்குள் வேரூன்றியிருக்கின்றன. ஆகவே, நாம் தேவனை யார் என்று நினைக்கிறோமோ அவரிடமாக சகலமும் செல்கின்றன.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

*அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையில்* தேவனைப் பற்றிய உபதேசத்தின் இரண்டு முக்கிய அம்சங்கள் காணப்படுகின்றன. முதலாவது, திரியேக தேவன் என்ற விசுவாசத்தைச் சுற்றி இந்த விசுவாச அறிக்கை கட்டமைக்கப்பட்டிருக்கிறது. மற்றும் இரண்டாவதாக, இது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று தேவனுடைய வெவ்வேறு ஆள்த்துவத்தைக் குறித்த அறிக்கைகளை உருவாக்குகிறது. முதலாவது திரித்துவத்தைப் பற்றிப் பார்ப்போம்.

## திரித்துவம்

*அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கை* மூன்று பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதையும், ஒவ்வொரு பகுதியும் “நான் விசுவாசிக்கிறேன்” என்ற அறிக்கையுடன் முடிவதையும் நீங்கள் கவனித்திருப்பீர்கள். முதல் பகுதி பிதாவாகிய தேவனைக் குறித்த விசுவாசத்தைப் பற்றிப் பேசுகிறது. இரண்டாவது பகுதி, அவருடைய குமாரனும், நம்முடைய கர்த்தருமான இயேசு கிறிஸ்துவை குறித்த விசுவாசத்தைப் பற்றியது. மற்றும் மூன்றாவது பகுதி, பரிசுத்த ஆவியானவரைக் குறித்த விசுவாசத்தைச் சுருக்கமாகச் சொல்கிறது, மற்றும் அவருடைய செயல்மிக்க ஊழியத்தையும் பட்டியலிடுகிறது.

இப்பொழுது, இயேசு கிறிஸ்துவைக் குறித்ததான விதிகளுக்கு முன்பாக “நான் விசுவாசிக்கிறேன்” என்ற வார்த்தையை விசுவாச அறிக்கையினுடைய எல்லா பழமையான பதிப்புகளும் சேர்க்கவில்லை என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டும். அந்த இடத்தில், பல அறிக்கைகள் சாதாரணமாக “மற்றும்” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன, இது இந்தச் சூழலுக்கு, “நான் விசுவாசிக்கிறேன்” என்ற வார்த்தை தரும் அதே வலிமையைக் கொடுக்கிறது. அனைத்து சந்தர்ப்பங்களிலும், எப்படியாயினும், விசுவாச அறிக்கையினுடைய பிரிவுகள், தேவனுடைய ஆள்த்துவங்களின்படி, சபையால் உலகளாவிய முறையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சூத்திரம் திரித்துவமாகும். அதாவது, இது தேவன் ஒருவரே, அந்த தேவன் மூன்று ஆள்த்துவமுடையவர், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று அழைக்கப்படுகிறார்கள் என்ற விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இதே சூத்திரத்தை நாம் மத்தேயு 28:19 பகுதியில் கண்டுகொள்ளலாம், அங்கே இயேசு இந்த கட்டளையை சீஷர்களுக்கு வழங்கினார்:

> ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள் (மத்தேயு 28:19).

இங்கே, *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையில்* காணப்படுவதுபோல, இந்த மூன்று நாமங்களும் ஒன்றாகவும் சமமாகவும் குறிப்பிடப்பட்டிருப்பது சொல்வது என்னவென்றால் பிதா, குமாரன் மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிசுத்த ஆவி ஆகிய மூவரும் தனித்துவமான ஆள்த்துவமுடையவர்களாயிருந்தாலும், அவர்கள் ஒரே தேவனாயிருக்கிறார்கள்.

ஒப்புக்கொண்டபடி, *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையானது* குறிப்பாக “திரித்துவம்” என்ற வார்த்தையை குறிப்பிடவுமில்லை அதன் விவரங்களை தருவதுமில்லை. ஆனால், இந்த விசுவாச அறிக்கையின் நோக்கம் நாம் நம்பும் காரியங்களின் சுருக்கமாக இருக்க வேண்டுமே தவிர, இது விசுவாச அறிக்கையினுடைய விரிவுரை அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேலும் சபையின் வழிபாட்டு முறைகளில் இது பயன்படுத்தப்பட்டபோது, தேவனுடைய இந்த மூன்று ஆள்த்துவங்களைப் பற்றி இவ்விதமாகக் குறிப்பிடுவது, திரித்துவத்தின் மையக்கருத்தைக் குறிப்பதற்கே என்று சபையிலுள்ள ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள்.

எல்லா கிறிஸ்தவர்களும் திரித்துவம் என்ற வார்த்தையினுடைய முழு அர்த்தத்தையும் புரிந்துகொள்ளவில்லை, ஆகவே, இங்கே நாம் கொஞ்சம் நின்று இதை விளக்குவோம். திரித்துவம் என்பது பொதுவாக இப்படியாகக் கூறப்படுகிறது:

> தேவன் மூன்று நபர்களாக, ஆனால் ஒரே சத்துவமுடையவராக இருக்கிறார்.

நபர் என்று சொல்லும்போது, ஒரு தனித்துவமான, சுய விழிப்புடைய ஆள்த்தன்மையுடையவர் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். சத்துவம் என்று சொல்லும்போது, தேவனுடைய அடிப்படை இயல்பு அல்லது அவர் கொண்டிருக்கிற சாரம் என்பதை நாம் குறிப்பிடுகிறோம்.

உண்மையில், திரித்துவம் என்ற கருத்தானது மனிதர்கள் கிரகிப்பதற்கு மிகவும் கடினமான ஒரு காரியமாகும். தேவனுடைய இருப்பு மற்றும் இயல்பு என்பது நம்முடைய அனுபவ எல்லைக்கு மிகவும் அப்பாற்பட்டவை அதாவது அவரை கற்பனை செய்வது நமக்கு கடினமானது. இருந்தாலும், திரித்துவம் என்பது கிறிஸ்தவத்தினுடைய மிக முக்கியமான தனித்துவமான விசுவாசங்களுள் ஒன்று. ஆனால் இப்படிப்பட்டதான சிக்கலான உபதேசம் எப்படி கிறிஸ்தவ இறையியலின் முக்கிய மூலைக்கல்லானது?

> நல்லது, திரித்துவம் என்பது நீங்கள் வேதாகமத்தை முழுமையான விதத்தில் வாசிக்கும்போது அறிந்துகொள்ளும் ஒன்று. தங்களுடைய தனித்துவமிக்க ஆள்த்துவத்தில், பிதா முழுமையாக தேவனாக இருக்கிறார், குமாரனும் முழுமையாக தேவனாக இருக்கிறார், மற்றும் ஆவியானவரும் முழுமையாக தேவனாக இருக்கிறார் என்பதை நீங்கள் கண்டு அறிந்துகொள்கிறீர்கள். அதனால்,

திரித்துவத்தினுடைய கோட்பாடு போன்ற ஒன்றைக் கொண்டு வேதவாக்கியத்தின் போதனைகளை ஒன்று சேர்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

Dr. கே. எரிக் தோனேஸ்

ஆகவே, திரித்துவ கோட்பாடு கிறிஸ்தவ இறையியலின் மூலைக்கல்லாயிற்று, நான் இதை முதன்மையானதாகக் கருதுகிறேன், ஏனென்றால், இது வேதாகம கோட்பாடாக இருக்கிறது. இப்பொழுது நாம் அதை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதில் கவனமாக இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனென்றால் தி-ரி-த்-து-வ-ம் என்ற வார்த்தையானது வேதவாக்கியத்தில் இல்லை, ஆனால் அதைப் பற்றிய கருத்து வேதவாக்கியத்தில் இருக்கிறது. தேவன் ஒருவரே என்றும் தேவத்துவத்தில் உள்ள பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியும் தேவனாக இருக்கிறார்கள் என்றும் வேதம் போதிக்கிறது. இது தேவன் திரியேக தேவனாயிருக்கிறார் என்பதை உறுதி செய்கின்றது.

Dr. ராபர்ட் ஜி. லிஸ்டர்

எனவே, தேவன் ஒரே சத்துவமுடையவராயிருக்கிறார் என்று நாம் சொல்லும்போது, தேவன் ஒருவரே என்கிற வேதாகம சத்தியத்தை நாம் பாதுகாக்கிறோம். மற்றும் மூன்று தனித்த ஆள்த்தன்மையுடையவர்கள் எவ்வாறு ஒரே தேவனாக இருக்கிறார்கள் என்பதை விளக்குவதற்கு நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். நாம் பயன்படுத்தும் சத்துவம் என்ற வார்த்தையானது இந்த மூன்று ஆள்தன்மையுடையவர்களும், பொதுவாக ஒருவருக்கொருவர் மற்றவர்களுடன் முற்றிலுமாக பகிர்ந்துகொள்கிறார்கள், பிதாவைச் சார்ந்தது *எதுவோ* அது குமாரனையும் சாரும் அதைப்போலவே அது ஆவியானவரையும் சாரும்.

மேலும் தேவன் மூன்று ஆள்த்தன்மையுடையவராயிருக்கிறார் என்று நாம் சொல்லும்போது, வேதாகம சத்தியமான பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூவரும் ஒருவருக்கொருவர் தனித்துவமானவர்கள் என்பதை நாம் பாதுகாக்கிறோம். அவர்கள் ஒருவருக்கொருவர் உரையாடுகிற, ஒருவரையொருவர் தொடர்புகொள்கிற, ஒருவருக்கொருவரான உறவுமுறையில் இணைக்கப்பட்ட தனித்தனி நபர்கள் ஆவார்கள். பல வழிகளில், திரித்துவம் என்ற கருத்து ஒரு பெரிய மறைபொருள் ஆகும். ஆனால், இது அசாதாரணமான நம்முடைய தேவனுடைய இயல்பின் மீதான வேதாகமத்தினுடைய பல போதனைகளின் மிகத் துல்லியமான சுருக்கமும் ஆகும்.

திரித்துவத்தைக் குறித்ததான யோசனை கிறிஸ்தவ இறையியலுக்கு பல காரணங்களால் முக்கியமானது. எடுத்துக்காட்டாக, இயேசுவானவர் தேவன், மற்றும் இயேசு வெறுமனே பிதாவினுடைய மாறுவேஷம் அல்ல என்ற நம்முடைய விசுவாசத்தை இது பாதுகாக்கிறது. பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று நபர்களை நாம் ஆராதிக்கிறோம், ஜெபிக்கிறோம் என்றாலும், ஒரே தேவனை மட்டுமே வணங்குகிறோம் என்பதையும் இது விளக்குகிறது. இதற்கு அப்பால், தேவத்துவத்தில் உள்ள எல்லா நபர்களுக்கும் சரியான கனத்தைக் கொடுக்க இது நமக்கு உதவுகிறது. மேலும் இது தேவனுடைய எந்தவொரு ஆள்த்துவத்தின் பிரசன்னமும், உதவியும் தேவனுடைய பிரசன்னமும் உதவியுமே என்ற ஞானத்தைத் தந்து நம்மை ஆறுதல்படுத்துகிறது. உண்மையில், திரித்துவத்தில் வைக்கின்ற விசுவாசமானது கிறிஸ்தவத்தினுடைய மற்ற அநேக கருத்துக்களுக்கு அடித்தளமாகும் அதாவது வரலாற்று கிறிஸ்தவத்தை இந்த கருத்து இல்லாமல் கற்பனை செய்வது கடினமானது.

*அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையில்* காணப்படுகிற தேவனைப் பற்றிய உபதேசத்தைப் பார்த்த வண்ணமாக, ஒருவரிலிருந்து ஒருவரை வேறுபடுத்திக் காட்டும் வெவ்வேறு ஆள்த்துவங்களைப் பற்றிய அறிக்கைகளைப் பரிசீலனை செய்வோம்.

## நபர்கள்

பிதாவைப் பொறுத்தவரை, விசுவாச அறிக்கையானது, அவர் சர்வவல்லமையுள்ளவர் என்ற பண்பைக் கூறுகிறது, மற்றும் அவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் என்ற வரலாற்று உண்மையைக் குறிப்பிடுகிறது.

தேவன் அவருடைய எல்லையில்லாத வல்லமை மற்றும் சர்வாதிகாரத்தைவிட அதிகமான பண்புகளைக் கொண்டுள்ளார், மற்றும் உலகத்தை உண்டாக்கினதை விட அதிகமான வியக்க வைக்கும் செயல்களை அவர் செய்துள்ளார். மேலும் சில முக்கிய புரிதல்களில், பிதாவைக் குறித்ததான விசுவாச அறிக்கையினுடைய விரிவுரை, கிறிஸ்தவத்தை, சர்வாதிகாரம், தெய்வீக சிருஷ்டிப்பு போன்ற நம்பிக்கையை வெளிப்படுத்தும் மற்ற மதங்களிலிருந்து வித்தியாசப்படுத்தவில்லை. ஆனால், கிறிஸ்தவத்தை ஒத்துப்போகின்றதான பிதாவைக் குறித்த ஒரு நபரினுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்கு இந்த அறிக்கைகள் போதுமானவை என்று ஆதி சபை எண்ணியது. மேலும் கிறிஸ்தவத்தை அதைச் சுற்றிலும் இருக்கும் மற்ற மதங்களிலிருந்து வித்தியாசப்படுத்துவதற்கு அவர்கள் விசுவாச அறிக்கையினுடைய மற்ற அறிக்கைகளைச் சார்ந்திருந்தனர்.

உதாரணமாக, இந்த விசுவாச அறிக்கையானது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்வதற்கு அநேக காரியங்கள் உள்ளன. இது அவருடைய இயற்பண்புகளைப் பற்றி விவரிக்கவில்லை என்றாலும், இது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவருடைய உலக வாழ்க்கை மற்றும் ஊழியத்தைக் குறித்ததான பல விவரங்களைக் குறிப்பிடுகிறது – இந்த விவரங்கள் சபைக்கு வெளியில் காணப்படுகிறவர்களால் மறுக்கப்படுகிறதாய் காணப்படலாம்.

இந்த விசுவாச அறிக்கையானது இயேசுவினுடைய அவதாரம், மனிதக் குழந்தையாகப் பூமிக்கு அவரது வருகை மற்றும் உண்மையான மனித வாழ்க்கையை வாழ்தல் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது. மேலும் இது அவருடைய பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் பற்றிப் பேசுகிறது. இந்த அடிப்படை உண்மைகளை அவைகள் சம்பவித்திருந்த போதிலும் அவிசுவாசிகள் மறுதலிக்கின்றனர் என்று வேதவாக்கியங்கள் சொல்கின்றன.

இன்றும் கூட, பல முற்போக்கு எண்ணம் கொண்ட வரலாற்றாசிரியர்கள் மற்றும் இறையியலாளர்கள், பல கள்ள மதங்கள் மற்றும் தவறான கிறிஸ்தவ வழிபாட்டாளர்கள் செய்வதுபோல இந்த உண்மைகளை மறுக்கின்றனர். உதாரணமாக, இயேசு தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசி என்று இஸ்லாம் மதம் உறுதிப்படுத்துகிறது. ஆனால் அவர் ஒருபோதும் சிலுவையில் அறையப்படவில்லை அல்லது உயிர்த்தெழுப்பப்படவில்லை என்று அது வலியுறுத்துகிறது, மேலும் அது அவருடைய தெய்வீகத்தன்மையை மறுக்கிறது.

இறுதியாக, விசுவாசிகளுக்கு நித்தியமான, ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை வழங்கியும், பொல்லாதவர்களை தண்டித்தும் கடைசி நாளில் இந்த மனித இனம் முழுவதையும் நியாயம் விசாரிப்பவராக இயேசுவின் பங்கைப் பற்றி இந்த விசுவாச அறிக்கை குறிப்பிடுகிறது.

கன்னி மரியாளின் வயிற்றில் இயேசு உருவாகும்படி பரிசுத்த ஆவியானவர் செய்தார் என்று ஆவியானவரைக் குறித்து இந்த விசுவாச அறிக்கை சொல்கிறது. அதைவிட, இது தேவனுடைய தனித்துவமான ஆள்த்துவத்தை அவருடைய இருப்பின் மூலம் உறுதிப்படுத்துகிறது. எப்படியிருந்தாலும், மறைமுகமாக, இந்த விசுவாச அறிக்கையானது பரிசுத்த ஆவியானவரைச் சபையுடனும், நமது இரட்சிப்பின் அனுபவத்தை தற்சமயத்துடனும் வருங்காலத்துடனும் இணைக்கிறது.

இனிவரும் பாடங்களில் தேவனின் ஒவ்வொரு ஆள்த்துவங்களைக் குறித்து அதிகமாக நாம் கற்றுக்கொள்ளவிருக்கிறோம். இதுவரையில், விசுவாச அறிக்கையானது, திரித்துவ தத்துவத்தை உறுதிப்படுத்துவதில் மட்டும் கவனம் செலுத்தவில்லை, ஆனால் கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமான திரித்துவத்தின் ஒவ்வொரு நபரைப் பற்றிப் பேசுகிறது என்பதையும் நாம் இங்கே சுட்டிக்காட்டுவோம். இந்தக் கூற்றுகள் விரிவானவையல்ல என்றாலும், விசுவாச அறிக்கையானது, வரலாற்று கிறிஸ்தவ விசுவாசத்தை உடையவர்கள் அந்த விசுவாசம் இல்லாதவர்களிடமிருந்து, தேவனையும் அவருடைய ஆள்த்துவங்களைப் பற்றியும் வேறுபடுத்திக்காட்டுவதற்குப் போதுமான அளவு சொல்கிறது.

இப்பொழுது தேவனைக் குறிக்கும் இறையியல் கூற்றுக்களை நாம் குறிப்பிட்டுள்ளோம், சபையைக் குறித்து *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பேசும் வழிகளைச் சுட்டிக்காட்ட நாம் தயாராக உள்ளோம்.

## சபை

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது,* சபையை இருவேறு சொற்றொடர்களால் விவரிக்கிறது. முதலாவது, சபையானது பரிசுத்தமான உலகளாவிய ஒன்றாக அழைக்கப்படுகிறது. இரண்டாவது, சபையானது பரிசுத்தவான்களின் ஐக்கியம் என்று விவரிக்கப்படுகிறது. இந்த சொற்றொடர்கள் பல்வேறு வழிகளில் விளக்கப்பட்டு வருகிறது, மேலும் இதனை இனிவரும் பாடங்களில் சிறப்பான விவரங்களுடன் நாம் கையாள்வோம். தற்போது, இந்த பரிசுத்தமான உலகளாவிய சபையானது ரோம கத்தோலிக்க சபையைக் குறிக்கவில்லை மாறாக, சபை அதன் சகல அங்கங்களுடன் உலகளாவிய அளவில் உள்ளதை நாம் சுட்டிக்காட்டுவோம்.

இருப்பினும், சபையை ஒரு அமைப்பாக விசுவாசிப்பதைப் பற்றி நினைப்பது பல எதிர்ப்பாளர்களுக்கு விசித்திரமாகத் தோன்றலாம். ஆகவே, "நான் சபையை … விசுவாசிக்கிறேன்" என்று விசுவாச அறிக்கை சொல்லும்போது, இது நாம் நமது விசுவாசத்தை சபையின் மீது வைக்கிறோம் என்பது இதன் அர்த்தமல்ல என்பதை விளக்குவதற்கு உதவியாக இருக்கும். மாறாக, சபை என்பது பரிசுத்தமானதும் பரிசுத்தமாக்கப்பட்டதும், உலகளாவிய சபை என்ற அர்த்தமுடைய கத்தோலிக்க சபையாகவும் இருக்கிறது என்கிற நம்பிக்கையை நாம் உறுதிப்படுத்துகிறோம் என்பதை இது அர்த்தப்படுத்துகிறது.

அங்கே பரிசுத்தவான்களின் ஐக்கியம் அதாவது விசுவாசிகளின் ஐக்கியம் இருக்கிறது என்பதை நாம் உறுதிப்படுத்துகிறோம். இந்த உணர்வுகளின்படி வரலாற்று கிறிஸ்தவம் சபையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

இந்தப் பாடத்தில், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* காணப்படுகிற விசுவாசத்தைக் குறித்ததான விதிகளுக்கு மையமாகக் காணப்பட்டதான சபையின் இரண்டு அம்சங்களின் மீது நாம் கவனம் செலுத்துவோம். ஒருபுறம், சபையில் பங்குபெறுதலைப் பற்றிப் பார்ப்போம். மறுபுறம், சபையானது உபதேசத்தைப் பாதுகாப்பதையும் நாம் பரிசீலிப்போம். சபையில் பங்குபெறுவதுடன் துவங்குவோம்.

### பங்கேற்பு

நான் "பரிசுத்த....சபையை விசுவாசிக்கிறேன்" என்று விசுவாச அறிக்கை சொல்லும்பொழுது, இது சபையில் பங்கேற்பதில் உள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. உண்மையாகவே, கிறிஸ்தவ சபை வரலாற்றில், அநேக ஜனங்கள் தேவனை தங்கள் பிதாவாகவும், இயேசுவைத் தங்கள் கர்த்தராகவும், ஆவியானவரைத் தங்களுக்காகப் பரிந்து பேசுபவராகவும் கொண்டிருக்க



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விரும்பினர், ஆனால், கூட்டிச்சேர்க்கப்பட்ட தேவனுடைய ஜனங்களாக, காணக்கூடிய சபையின் அங்கத்தினராக இருப்பதற்கு விரும்பவில்லை. எபிரெயர் 10:25 இல் நாம் வாசிக்கிறது போல:

> சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் இருப்போம் (எபிரெயர் 10:25).

முதல் நூற்றாண்டில் கூட, விசுவாசிகள் என்று சொல்லிகொண்ட சிலர் ஆராதனைக்குரிய இடமாக, போதனை செய்வதற்குரிய மற்றும் ஐக்கியம் கொள்வதற்குரிய இடமாக, சபையில் கூடுவதை புறக்கணிக்க விரும்பினர். ஆனால் வேதவாக்கியம் கற்பிப்பது என்னவென்றால் சபையானது கிறிஸ்தவர்களுக்கு மிக முக்கியமானதும் அவசியமானதுமான ஒன்றாகும்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* உண்மையாக பயன்படுத்தியவர்கள் இப்படியிருக்கவில்லை. இதற்கு முரணாக, இந்த விசுவாச அறிக்கையானது குறிப்பாக சபை ஒழுங்குகளில் பயன்படுத்தப்பட்டது. மேலும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள சபைக்கு வந்தவர்களால் இது உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தார்கள், கூடுகையிலே இணைக்கப்பட்டு வந்தார்கள். விசுவாச அறிக்கை நாம் பின்பற்ற வேண்டியதாக நமக்கு முன் வைக்கப்படும் ஒரு மாதிரி தான்.

இன்னும்கூட, இந்த நவீன உலகத்திலே சபையைப் புறக்கணிக்கிற கிறிஸ்தவர்கள் நமக்கு எதிர்படுகிறார்கள். அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட மதத்தை விரும்பாததுதான் ஒருவேளை இதற்குக் காரணமாக இருக்கலாம். அல்லது அவர்கள் மற்ற கிறிஸ்தவர்களால் தவறாக நடத்தப்பட்டிருக்கலாம். அல்லது கிறிஸ்தவ புத்தகங்கள் வாசிப்பதும், கிறிஸ்தவ தொலைக்காட்சியைப் பார்ப்பதும், கிறிஸ்தவ இணையதளங்களைப் பயன்படுத்துவதும் போதுமானது என்று ஒருவேளை நினைக்கலாம்.

ஆனால், கிறிஸ்தவர்கள் உண்மையான, சரீரம் சார்ந்த சமூகத்தை அமைப்பதையும் வேதம் கற்பிக்கிறது மற்றும் இந்த சமூகமானது ஒவ்வொரு விசுவாசிக்கும் தீவிர முக்கியத்துவமுடையதாக இருக்க வேண்டுமென்றும் வேதம் வலியுறுத்துகிறது. கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ஐக்கியத்தை ஒருவருக்கொருவர் கிறிஸ்து மூலமாகவும் அவருடைய ஆவியானவர் மூலமாகவும் கொண்டிருக்கிறோம் என்பது உண்மை தான் என்றாலும், ஆவிக்குரிய ஐக்கியத்தை இது மட்டுப்படுத்தக்கூடாது. மாறாக, நம்முடைய சமூகம் என்பது ஒரு குடும்பத்தைப்போல் அல்லது அயலாரைப்போல் இருக்க வேண்டும். இது முகம் முகமாகப் பார்த்து ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ளக்கூடியவர்களான ஜனங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

சபையில் பங்கேற்பதன் முக்கியத்துவத்தை மனதில் வைத்துக்கொண்டு, உபதேசமானது சபையால் சபையில் எப்படி பாதுகாக்கப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பாதுகாப்பு

> முன்நாட்களிலிருந்து, சபைகளில் விசுவாச அறிக்கையை முறையாக ஒப்புவித்தல், அறிக்கையிடுதல் மற்றும் மனப்பாடம் செய்தல் போன்றவை மிக மிக முக்கியமான பங்கை, விஷேசமாக முதல் நூற்றாண்டு உலகத்தைச் சார்ந்த சமுதாயம் மற்றும் அதற்கு அப்பாற்பட்டு படிப்பறிவு மிக மிக கீழ்நிலையில் காணப்பட்ட முற்கால கிறிஸ்தவத்திற்கு ஆற்றியது. மேலும் மிகச் சில ஜனங்களே வேதத்தை வாசிக்க முடிந்தது மற்றும் அவர்களில், மிகச் சிலருக்கே வேதாகமம் சொந்தமாக இருந்தது. எனவே ஆராதனை கூட்டத்தில் பகிரங்கமாக இந்த விசுவாச அறிக்கையை முறையாக அறிக்கையிடும் காரியமானது மீண்டுமாக ஒரு முக்கிய அளவீட்டை வழங்குவதற்கோ அல்லது விசுவாச விதி என்று நாம் அளிப்பதற்கோ அல்லது வேத வாக்கியங்களை எவ்வாறு ஒன்றாக இணைப்பது என்ற சரியான புரிதலுக்கான முறைப்படுத்தப்பட்ட வாசிப்பிற்கோ இது வழிவகுத்தது.
>
> Dr. ஜோனதான் டி. பென்னிங்டன்

நாம் ஏற்கனவே சொன்னது போல, விசுவாசத்தின் விதிகளைப் பற்றி நாம் பேசும்போது சபையானது தவறிழைக்காதது அல்ல. மேலும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* சபை போதிக்கும் எல்லாவற்றையும் நாம் விசுவாசிக்கும்படி நம்மை ஊக்குவிக்கவில்லை. மாறாக, கிறிஸ்துவானவர் அவரது சபையை, சுவிஷேசம் மற்றும் பிற சத்தியங்களைப் பாதுகாக்கவும், அதனைப் பிரசித்தப்படுத்தவும் நியமித்தார் என்ற உண்மையை இது உறுதிப்படுத்துகிறது. இயேசுவின் சகோதரராகிய யூதா, சபையினுடைய பணியைப் பற்றி அவருடைய நிருபத்தில் வசனங்கள் 3-4 இல் எழுதியுள்ள விதத்தைக் கவனியுங்கள்:

> பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்ற

> சிலர் .... பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள் (யூதா வசனங்கள் 3 - 4).

யூதாவின்படி, விசுவாசத்திற்காக போராடுவதும் கள்ள போதனைகளையும், செயல்பாடுகளையும் ஊக்குவிக்கிறவர்களுக்கு எதிராக, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட சத்தியங்கள் மற்றும் நம்பிக்கைகளைப் பாதுகாக்க வேண்டியதும் சபையின் கடைமைகளின் ஒரு பகுதியாகும்.

இப்பொழுது, சபையின் பல்வேறு பகுதிகளில் அநேக கள்ள போதனைகள் உள்ளன என்பதைக் குறித்து நம்மில் அநேகர் தெளிவாக இருக்க வேண்டும். மேலும் அங்கே அநேக பாவமான செயல்பாடுகளும் காணப்படுகின்றன. அப்படியிருந்தும்கூட, தேவன் ஒருபோதும் சபையினுடைய வேலையை திரும்பப்பெற்றுக் கொள்ளவில்லை, அல்லது உண்மையான உபதேசத்தைப் பாதுகாக்கும் பணியை வேறு ஏதாவதொரு குழுவோ அல்லது தனிநபரோ ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அறிவிக்கவில்லை. இன்னமும் சத்தியத்தைப் பாதுகாக்க வேண்டியது சபையினுடைய பணியே.

மேலும் சபையானது இன்னமும் அதனுடைய பணியைச் செய்வதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறது. சில நேரங்களில், நாம் மற்றவர்களை விட சிறப்பாகச் செய்கிறோம். நம்முடைய சில இறையியல் வேதவாக்கியங்களுக்கு உண்மையாக இருக்கிறது, ஆனால், மற்ற பகுதிகள் இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும், அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். இது எப்பொழுதும் இருக்கும். ஆனால், இந்தப் பாடத்தில் நம்முடைய நோக்கங்களுக்காக, நாம் குறிப்பிட விரும்பும் விஷயம் இதுதான்: நம்மால் விட்டுவிட முடியாது. சபைகளில் உபதேசத்தைப் பாதுகாப்பதற்கு நாம் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். மற்றும் இந்த அழைப்பை நாம் கைவிடுவோமானால், நான் சபையை விசுவாசிக்கிறேன் என்கிற வரலாற்றுக் கிறிஸ்தவ விசுவாசத்தின் மைய விதியை நாம் மறுதலிக்கிறவர்களாயிருப்போம்.

சபைக்கும் தேவனுக்கும் தொடர்புடைய விசுவாசத்தின் விதிகளைப் பார்த்தோம், நம்முடைய மூன்றாவது வகைக்கு நேராக திரும்புவதற்கு நாம் தயாராக உள்ளோம்: *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* வழங்கப்பட்டுள்ளதான இரட்சிப்பைக் குறித்ததான கூற்றுகள் என்பதே அது.

# இரட்சிப்பு

> அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின் கடைசிப் பகுதியில் இரட்சிப்பைப் பற்றி நிறைய காரியங்கள் உள்ளன. சிலர் அவைகள் ஏன் வேறு இடத்தில் இல்லாமல், கடைசிப் பகுதியில் உள்ளன என்று ஆச்சரியப்படுகிறார்கள். மேலும் நிச்சயமாக உண்மையில் விசுவாச அறிக்கை நமக்குச் சொல்லவில்லை. ஆனால், நீங்கள் அதைப் பார்க்கும் போது,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எனக்குத் தோன்றும் விதம் என்னவென்றால், இரட்சிப்பின் அனுபவம் திரியேக தேவனாகிய பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் மூலமாகத் தான் நமக்குள் கடந்து வருகிறது என்பதையும் எந்தவொரு மனிதக் கட்டமைப்பிலிருந்தோ அல்லது மனித அமைப்பிலிருந்தோ வரவில்லை என்பதையும் விசுவாச அறிக்கையானது ஸ்தாபிக்க விரும்புகிறது. பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியானவராகிய தேவன் யார் என்று அறிந்துகொள்வது, நமது பாவங்களை அறிக்கையிட்டால் நாம் இரட்சிக்கப்படுவோம் என்ற வாக்குத்தத்தம் மற்றும் அழைப்பை நோக்கி நம்மை வழிநடத்துகிறது. எனவே, தேவனுடனான நம்முடைய உறவின் பலனானது திரித்துவத்தில் தேவன் யார் என்ற அடிப்படையிலிருந்து வந்தது என்பதைக் காண்பிப்பதற்காகவே அந்த அறிக்கைகள் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளன என்று நான் நினைக்கிறேன்.
>
> Dr. ஸ்டீவ் ஹார்ப்பர்

விசுவாச அறிக்கையில் காணப்படுகிற கடைசி மூன்று விசுவாச விதிகளும் இரட்சிப்பின் அம்சங்களைக் கையாள்கின்றன. விஷேசமாக, அவைகள் பாவத்திற்கான மன்னிப்பு, சரீரத்தின் உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய வாழ்வு ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன. பாரம்பரிய முறைப்படுத்தப்பட்ட இறையியலில், உயிர்த்தெழுதலும், நித்திய வாழ்வும், கடைசி காலத்தைக் குறித்த உபதேசமாகிய கடைசிக் கால இயல் என்னும் தலைப்பின் கீழ் கையாளப்படுகிறது. ஆனால் எளிமைக்காக, நாம் இரட்சிப்பு என்னும் தலைப்பின் கீழ் மட்டுமே உரையாற்றுவோம்.

அனைத்து கிறிஸ்தவர்களும் பாவத்திற்கான மன்னிப்பானது இயேசு கிறிஸ்துவின் பரிகாரக் கிரியை மூலமாகத்தான் கிடைக்கிறது என்பதை விசுவாசிக்கிறார்கள். நமது பாவங்களை நாம் அறிக்கையிட்டு, மனந்திரும்பினால், தேவன் அந்த பாவங்களுக்காக நம்மை நரகத்தில் தண்டிக்கமாட்டார் என்று நாம் விசுவாசிக்கிறோம். மேலும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* சுட்டிக்காட்டுவதுபோல, முன்னாட்களிலிருந்தே இது சபையின் நம்பிக்கையாக இருந்து வந்தது. மன்னிக்கப்பட்டவர்கள் அனைவரும் இயேசு கிறிஸ்து மூலமாக நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று வேத வாக்கியங்களும் போதிக்கிறது என்பது நாம் அறிந்ததே. உதாரணமாக, யோவான் 3:16-18 இந்த வார்த்தைகளினால் நம்மை உற்சாகப்படுத்துகிறது:

> தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்... அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான் (யோவான் 3:16-18).

நித்திய ஜீவன் என்பது எல்லா விசுவாசிகளுக்கும் உரியது. ஒரு விதத்தில் பார்க்கும்போது, நமது ஆத்துமாக்களுக்கு புதிய ஜீவன் கொடுக்கப்படுகிறது மற்றும் அது ஒருபோதும் மரிப்பதில்லை என்பதால், நாம் விசுவாசத்திற்குள் வரும் தருணத்தில் தானே இது துவங்குகிறது.

ஆனால் விசுவாச அறிக்கையால் உறுதிப்படுத்தப்பட்ட நித்திய ஜீவனுக்குரிய இயல்புத்தன்மையானது சிலநேரங்களில் நவீன கிறிஸ்தவர்களை ஆச்சரியப்பட வைக்கிறது. விசேஷமாக, விசுவாச அறிக்கை சரீர உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசுகிறது. சிலநேரங்களில், விசுவாச அறிக்கையானது இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசுகிறது என்று நினைத்து கிறிஸ்தவர்கள் தவறாக புரிந்துகொள்கிறார்கள். ஆனால், அப்படியல்ல. இயேசுவினுடைய உயிர்த்தெழுதல் விசுவாச அறிக்கையின் முற்பகுதியிலேயே “மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்” என்ற வார்த்தையுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விசுவாசத்தின் விதியானது மீண்டுமாக சொல்லப்படவில்லை.

மாறாக, விசுவாச அறிக்கையானது மரித்தவர்களின் உயிர்த்தெழுதலைப் பேசும்போது, சகல ஜனங்களும் நியாயத்தீர்ப்பின் நாளிலே உயிர்த்தெழுவார்கள், மற்றும் அவர்கள் சரீரமற்ற ஆவிகளாக அல்லாமல் சரீரமுடைய சிருஷ்டிகளாக அவர்களுடைய நித்திய விதிகளுக்கு நேராகச் செல்வார்கள் என்ற வேதாகம போதனைகளைக் குறிப்பிடுகிறது. இது வேதவாக்கியத்தின் நிலையான போதனை, மற்றும் ஆயிரக்கணக்கான வருடங்களாக சபைகளில் காணப்படுகிற விசுவாசத்தின் ஒரு விதியாக உள்ளது. யோவான் 5:28-29 இல் இயேசு போதித்தது போல:

> பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் [குமாரனுடைய] சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, – நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (யோவான் 5:28-29).

விசுவாச அறிக்கையின் இரட்சிப்பைப் பற்றிய கூற்றானது வேதவாக்கியத்தில் தெளிவாக போதிக்கப்பட்டிருக்கிறது மற்றும் வேதாகம சபைகளால் எப்பொழுதும் அரவணைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்கின்ற பல நவீன ஜனங்கள் இந்த அடிப்படையான போதனைகளை நிராகரிக்கிறார்கள். சிலர், தேவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நம்முடைய பாவத்திற்கான கணக்கை வைத்திருக்கிறார் என்பதை மறுக்கிறார்கள் மற்றும் மன்னிப்பு அவசியமற்றது என்பதை வலியுறுத்துகிறார்கள். நம்முடைய சபைகளில் சில அவிசுவாசிகள் இந்த வாழ்க்கை தான் அனைத்தும், மற்றும் “நித்திய” ஜீவன் என்று அழைக்கப்படும் எந்த ஒன்றும் நாம் பூமியில் சரீரத்துடன் வாழும் நமது நேரத்துடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று போதிக்கிறார்கள். மேலும் பலர் பரலோகத்தில் நாம் சரீரமில்லாத ஆவிகளாக நித்தியத்தை செலவிடுவோம் என்று தவறான நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களுக்காக, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* விசுவாசத்தின் விதிகளானது முந்தைய நூற்றாண்டுகளில் இருந்ததுபோல இன்றைய சபைகளுக்கும் மிக அவசியமானதும், பொருத்தமானதும் ஆகும்.

சுருக்கமாக, *அப்போஸ்தலரின் விசுவாச அறிக்கையானது* தேவன், சபை மற்றும் இரட்சிப்பிற்குத் தொடர்புடைய உபதேசங்கள் மீது கவனம் செலுத்துகிறது. இந்தத் தொடரின் மற்ற பாடங்களில், இந்த கருத்துக்கள் ஒவ்வொன்றையும் மிக ஆழமாக ஆராய்வோம். ஆனால் தற்சமயம், இதிலுள்ள முக்கிய விஷயத்தை நாம் புரிந்துகொண்டோம் என்பதை நிச்சயித்துக்கொள்ள விரும்புகிறோம்: அதாவது நூற்றாண்டுகளாக கிறிஸ்தவத்தின் எல்லைகளை பயனுள்ளதாக வகுப்பதற்கு, இந்த கையளவு உபதேசங்கள் மையமாகவும் அடிப்படையாகவும் உள்ளன.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை*, விசுவாசத்தின் கட்டுரைகளாக இதுவரை நாம் விவாதித்ததில், விசுவாச அறிக்கையின் வரலாறு பற்றி பேசியுள்ளோம், மற்றும் அதன் இறையியலைப் பற்றிய கண்ணோட்டத்தை நாம் வழங்கியுள்ளோம். இப்பொழுது, நாம் நம்முடைய மூன்றாவது பெரிய தலைப்பான *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பட்டியலிடப்பட்டுள்ள விசுவாச கட்டுரைகளின் தொடர்ச்சியான முக்கியத்துவம் என்பதற்கு கடந்து செல்ல தயாராக உள்ளோம்.

# முக்கியத்துவம்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* காணப்படுகின்ற உபதேசக் கூற்றுகளின் முக்கியத்துவத்தின் மூன்று அம்சங்களை நாம் குறிப்பிடுகின்றோம். முதலாவது, இந்த போதனைகள் பிற கிறிஸ்தவ இறையியலுக்கு அஸ்திபாரம் போன்றது என்று நாம் விளக்கமளிக்கின்றோம். இரண்டாவது, சபைகளின் வழியாக இந்த போதனைகளின் உலகளாவிய உறுதிப்படுத்தலைப் பற்றி நாம் பேச இருக்கின்றோம். மேலும் மூன்றாவதாக, இந்த விசுவாச விதிகளின் ஒருங்கிணைந்த இயல்பு பற்றி நாம் பேச



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருக்கின்றோம். *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* காணப்படுகிற அடிப்படைத் தன்மைகளை ஆராய்ச்சி செய்வதிலிருந்து துவங்குவோம்.

## அடிப்படை காரியங்கள்

பெரிய கட்டிடங்கள் திடமான அஸ்திபாரம் உடையதாய் இருக்க வேண்டும் என்ற கருத்து அநேக ஜனங்களுக்கு பழக்கமானது. அஸ்திபாரம் தான் கட்டிடத்தின் மீதியுள்ள பகுதி உருவாக்கப்படுவதற்கு அடிப்படையானது. இது தான் அந்த கட்டிடத்தை ஒரு இடத்தில் உறுதியாக பிடித்து வைத்திருக்கிறதான நங்கூரம், மற்றும் அந்த முழு அமைப்புக்கு பலத்தையும், நிலைத்தன்மையையும் வழங்குகிறது.

எபேசியர் 2:19-21 இல், அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் மீது ஒரு கட்டிடமாக அஸ்திபாரம்போடப்பட்டிருக்கிறீர்கள் என்று பவுல் சபையைப் பற்றிப் பேசியிருக்கிறார். அவருடைய வார்த்தையை கவனியுங்கள்:

> நீங்கள் … அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள், அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது (எபேசியர் 2:19-21).

திடமான, உண்மையான அஸ்திபாரம் இல்லாமல், சபையானது தேவனை கனப்படுத்தும் விதத்தில் கட்டப்பட முடியாது.

மேலும் இதைப் போன்றே, தேவனைக் கனப்படுத்தவும் அவருடைய ஜனங்களுக்குப் பயன்படவும் வேண்டுமென்றால், கிறிஸ்தவ இறையியலானது உண்மையான உபதேசங்கள் மற்றும் கொள்கைகள் மீது அஸ்திபாரம் போடப்படவேண்டும். இயேசு சபைக்கு மூலைக்கல்லாய் இருப்பது போல, அவருடைய போதனைகளானது இறையியலுக்கு மூலைக்கல்லாய் இருக்கிறது. மேலும் கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதின் மூலமாக அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் சபையினுடைய அஸ்திபாரமானது போல, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* இறையியலுக்கு அஸ்திபாரமாகிறது ஏனென்றால் இது வேதவாக்கியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதான அப்போஸ்தலர்களின் போதனைகளை நமக்கு அறிமுகப்படுத்துகிறது.

> அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை பற்றிய அழகான விஷயம் என்னவென்றால், இன்றைய நாளில் நம்மிடம் காணப்படுகின்ற வெவ்வேறு பிரிவுகளையுடைய அனைத்து கிறிஸ்தவர்களும் கண்டிப்பாக உறுதி செய்யப்பட வேண்டிய அடிப்படை கிறிஸ்தவ உபதேசங்களை இது சுருக்கமாகத்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தருகிறது. தேவன் யார், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யார், ஆவியானவரின் கிரியை என்ன மற்றும் இரட்சிப்பைப் பற்றிய உபதேசத்தில் இந்த கிரியை எவ்வாறு வெளிப்படுகிறது, சபை, இறுதி நியாயத்தீர்ப்பை நோக்கியதான காரியங்கள் மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகை போன்றவை. இந்த அவசியமான, திறவுகோல் போன்றதான கிறிஸ்தவ உபதேசங்கள் இல்லாமல் நீங்கள் உண்மையான கிறிஸ்தவ விசுவாசம் கொள்ள முடியாது.
>
> Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்

நாம் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* அடிப்படை இயல்புகளை இரண்டு பகுதிகளில் பார்ப்போம். முதலாவது, மற்ற உபதேசங்களைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு தரத்தை இது எவ்வாறு வழங்குகிறது என்பதைப் பார்ப்போம். மேலும் இரண்டாவதாக, மற்ற உண்மையான உபதேசங்கள் கட்டப்படுவதற்கு தர்க்கரீதியான அடிப்படையாக இது செயல்படும் விதத்தைப் பற்றிப் பேசுவோம். ஒரு இறையியல் தரமாக *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* என்பதுடன் துவங்குவோம்.

## தரம்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* ஒரு உபதேசத் தரமாகச் செயல்படுகிறது, ஏனென்றால், கிறிஸ்தவத்தினுடைய மிக முக்கியமான பல பெரிய கருத்துக்களை இது வழங்குகிறது. இந்த கருத்துக்கள் வேதவாக்கியத்தில் மிகத் தெளிவாக போதிக்கப்பட்டிருக்கிறது அதாவது அவைகள் எல்லோராலும் அங்கீகரிக்கப்படவும், அரவணைக்கப்படவும் வேண்டும். இந்த பாடத்தின் முற்பகுதியில் நாம் சொன்னதுபோல, இந்த போதனைகளானது கிறிஸ்தவத்திற்கு அவசியமானது. இதன் விளைவாக, நாம் அரவணைக்கின்ற மற்ற ஒவ்வொரு உபதேசங்களும் இந்த போதனைகளுடன் ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். இந்த அவசியமான போதனைகளுக்கு முரண்படுகிற எந்தவொரு கருத்தையும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

நீங்கள் எப்பொழுதாவது பகடியைப் பார்த்ததுண்டா? பகடி என்பது ஒரு செயலை நிகழ்த்திக் காட்டும் கலைஞர் அதாவது அவர் பேசினாலும், பேசாதது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கக்கூடியவர். பகடிகள் பெரும்பாலும் கைப்பாவை போன்ற பொம்மைகளை வைத்து நிகழ்ச்சி நடத்துவார்கள், அதாவது அந்த பொம்மை அந்த பகடியுடன் உரையாடுவது போன்ற காட்சியை உருவாக்குகிறது. ஒரு திறமைமிக்க கலைஞர் அந்த கைப்பாவை உயிருடன் இருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கிவிடுவார். ஆனால்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எப்படிப்பட்டதான மனதைத்தொடும் நிகழ்ச்சியாக இருந்தாலும், உண்மையில் அந்த கலைஞர் தான் பேசிக்கொண்டிருக்கிறார், அந்த கைப்பாவையல்ல என்பது நமக்குத் தெரியும். ஏன்?

நன்று, இதன் பதில் மிகவும் எளிதானது. கைப்பாவைகள் என்பது உயிரற்ற பொருள் என்பதை நாம் அறிவோம், மற்றும் உண்மையில் அவைகளால் பேச முடியாது. எனவே, பேசுவதைப் போலத் தோற்றமளிக்கும் ஒரு கைப்பாவையை நாம் கவனிக்கும்போது, நம்முடைய அனுபவத்தை உண்மை என்று நமக்குத் தெரிந்தவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கிறோம். ஆகவே, அந்த பொம்மைகள் எவ்வளவு தான் பேசுவதுபோன்று தோன்றினாலும், நம்முடைய தரமானது, அந்த தோற்றம் ஒரு மாயை என்பதை நமக்கு சொல்லிவிடுகிறது. அதனால் நாம் அதை நம்புவதற்கு மறுக்கிறோம். அந்த கைப்பாவையானது எவ்வாறு உயிருள்ளதைப்போல் தோற்றமளிக்கிறது மற்றும் அதன் மனதிலுள்ளதை பேசுகிறது என்பதை நம்மால் விளக்க இயலாமல் இருக்கலாம். ஆனால், அங்கே, நம்முடைய தரத்துடன் இணக்கமானதாக இருக்கக்கூடிய தர்க்கரீதியான விளக்கம் இருக்க வேண்டும் என்பது நமக்குத் தெரியும்.

இதைப் போலவே, நாம் உறுதியாகப் பிடித்துக்கொண்டிருக்கிற அதாவது அவற்றை நாம் ஒருபோதும் மாற்றுவதில்லை என்கிறதான அந்த மைய விசுவாசத்தை *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* சுருக்கி கூறுகிறது. வேதாகமமானது, அதனுடைய கருத்துகளில் மிகத் தெளிவாக உள்ளது என்பதை நாம் விசுவாசிக்கிறோம், மற்றும் அவைகள் மிகவும் முக்கியமானவை, அதாவது அதன் மீது நாம் சமரசம் செய்துகொள்ள முடியாது. ஆகவே, மற்ற ஜனங்கள் இதைக் குறித்து எப்படிப்பட்ட பார்வைகளை வழங்கினாலும், வேதத்தினுடைய இந்த மையப் போதனைகளுடன் பொருந்தாத எந்தவொன்றையும் நாம் விசுவாசிப்பதற்கு மறுத்துவிடுகிறோம்.

நமது மனதை மாற்றக்கூடியதான தீய இறையியலை, கள்ள போதகர்கள் நமக்கு வழங்கும் சமயத்தில், நாம் வேதவாக்கியத்திற்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்பதற்கு விசுவாச அறிக்கையானது ஒரு தரமாக நமக்கு உதவுகிறது. நம்மில் அநேகர் அவர்களுடைய வாதங்களில் சிறந்து விளங்கக்கூடிய ஜனங்களைச் சந்தித்திருப்போம். மற்றும் அவர்கள் தனிநபர்களாக நிர்பந்திக்கக்கூடியவர்களாகக் காணப்படுவர், அதாவது அவைகள் – பொய்யானதாகவோ, தவறானதாகவோ இருந்தாலும் கூட நாம் அவர்கள் சொல்லும் அநேக காரியங்களை விசுவாசிக்கும்படியான ஆர்வத்தை உருவாக்கிவிடுவார்கள். ஆகவே, வேதவாக்கியத்தின் போதனைகள் மீது நம்மை நங்கூரம் பாய்ச்சுவதற்குரிய அவசியமான விசுவாசங்களடங்கிய சிறிய பட்டியலை நாம் கொண்டிருப்பதற்கு இது உதவுகிறது. *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* இப்படிப்பட்ட நங்கூரத்தைத் தருகிறது.

உதாரணமாக, முந்தைய நூற்றாண்டு சபையானது அதனுடைய வாழ்நாளில் பதிலளித்ததான அநேக முக்கியமான மார்க்கபேதங்கள் அங்கே

காணப்பட்டன. அவற்றுள் ஒன்று ஞானவாதம் ஆகும். மற்ற காரியங்களுக்குள், ஞானவாதம் போதித்தது என்னவென்றால் நம்முடைய சரீரங்கள் தீங்கானவைகள், அதனால் நம்முடைய சரீரமாகிய சிறையிலிருந்து நமது ஆத்துமாவை விடுவிப்பதில் இரட்சிப்பு ஈடுபடுகிறது. ஆதி சபையில் காணப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் இந்தத் தவறை நிராகரிக்க அறிந்திருக்கவில்லை. ஆனால், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையினுடைய* உபதேசங்களில் நன்றாக பயிற்சி பெற்றவர்கள் தைரியமாக இந்த மார்க்கபேதங்களை நிராகரித்தனர், அதாவது சரீர உயிர்த்தெழுதலை வேதவாக்கியங்கள் போதித்ததின் அடிப்படையில் அவற்றை நிராகரித்தனர். அதாவது, நம்முடைய ஆத்துமாக்களை மட்டுமல்ல, நம்முடைய சரீரங்களுடன் முழு மனிதர்களாக நம்மை மீட்கும்படிக்கு இயேசு வந்தார் என்று இது போதிக்கிறது.

நம்மில் அநேகர் புத்திசாலித்தனமான வாதத்தினால் குழப்பமடைந்துவிடுகிறோம், அல்லது தவறான அல்லது தவறாக சித்தரிக்கப்பட்ட தரவுகளால் தவறாக வழிநடத்தப்படுகிறோம். இப்பொழுது, இந்த வாதங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளில் இருக்கும் தவறு என்ன என்று நாம் எப்பொழுதும் விளக்கமளிக்க முடியாது. ஆனாலும் கூட, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கைக்கு* முரணாகக் காணப்படுகிற அந்த காரியங்களை நாம் தைரியமாக நிராகரிக்க முடியும் ஏனென்றால் விசுவாச அறிக்கையானது வேதவாக்கியத்திற்கு உண்மையுள்ளது என்பதை நாம் அறிவோம்.

உண்மையாக, வேதவாக்கியத்திற்கு நிகராக எந்தவொரு விசுவாசத்திற்குரிய கூற்றுகளையோ அல்லது *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* உயர்த்துவதற்கு நாம் ஒருபோதும் விரும்பவில்லை. வேதபுத்தகம் மட்டுமே பூரணமாக கேள்விகளுக்கு அப்பாற்பட்டது. மற்றும் வேதவாக்கியத்திற்கு முரணாகக் காணப்படுமானால் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* விசுவாச விதிகள்கூட நிராகரிக்கப்பட வேண்டும். ஆனால், சபையினுடைய ஆரம்ப நூற்றாண்டுகளிலிருந்து காலத்தின் சோதனையில் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* நிலைநின்றது. வேதத்தினுடைய பிழையற்ற பிரதிநிதியாக இது மறுபடியும் மறுபடியுமாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நவீன உலகில் நாம் எதிர்கொள்ளும் பல கோட்பாடுகளை சரியா என தீர்மானிப்பதற்கு ஒரு தரமாக இதைப் பயன்படுத்துவதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

*அப்போஸ்தலர்களுடைய விசுவாச அறிக்கை* எவ்விதமாக ஒரு பயனுள்ள கோட்பாட்டுத் தரமாக செயல்பட முடியும் என்பதை பரிசீலித்த பிறகு, இதனுடைய மற்றொரு அடிப்படை அம்சமான “பிற இறையியல் கண்ணோட்டத்திற்கான தர்க்க அடிப்படையாக இதன் பயன்பாடு” என்பதைப் பற்றிப் பேச நாம் தயாராக இருக்கிறோம்:.

## தர்க்க அடிப்படை

கருத்துக்களுக்கு இடையேயான தர்க்க ரீதியான தொடர்பு என்பது ஒரு நதி மற்றும் அதனுடைய மூல நீர் ஆதாரத்திற்கு இடையேயான தொடர்பை ஒத்திருக்கிறது. தர்க்கரீதியாக அடிப்படை கருத்துக்கள் என்பது நதியினுடைய மூலநீரைப் போன்றது. அவைகள் தான் பிற கருத்துக்களினுடைய ஆதாரம். மேலும் தர்க்க ரீதியாக சார்ந்திருக்கும் கருத்துகளானது, நதியானது அதன் மூலநீரிலிருந்து இயற்கையாகப் பாய்வதைப் போன்றது. ஆகவே, ஒரு கருத்து மற்றொரு கருத்துக்கான தர்க்க அடிப்படையாக செயல்படுகிறது என்று நாம் சொல்லும்போது, தர்க்கரீதியான அடிப்படை கருத்திலிருந்து, தர்க்க ரீதியாக சார்ந்திருக்கும் பிற கருத்துக்களை நிலைநாட்டுவதற்கு நகரும் நியாயமான வாதத்தை நம்மால் உருவாக்க முடியும் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம்.

உதாரணமாக, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* பிதாவாகிய தேவனைப் பற்றி வெளிப்படையாகச் சில காரியங்களைச் சொல்கிறது. இவை அனைத்தும் சொல்வது என்னவென்றால்:

> சர்வவல்லமையுள்ள பிதாவை நான் விசுவாசிக்கிறேன்.
> அவரே வானத்தையும் பூமியையும் படைத்தார்.

ஆனால் இந்த உபதேசங்கள் நாம் பிதாவைப் பற்றி விசுவாசிக்கும் அநேக பிற காரியங்களுக்கு தர்க்க ரீதியான அடிப்படையை உருவாக்குகின்றன. உதாரணமாக, தேவனே வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் என்ற அடிப்படையில், வானத்தின் மீதும், பூமியின் மீதும் அவருக்கு அதிகாரம் உண்டு என்றும், அடிப்படை சிருஷ்டிப்பு நன்றாக இருந்தது என்றும், இயற்கை உலகைப் பார்த்து தேவனைப் பற்றிய காரியங்களை நாம் கற்றுக்கொள்ளலாம் என்றும் நாம் சரியாக விசுவாசிக்கிறோம்.

ஒரு மரத்தைப் பார்ப்பதன் மூலமாக தர்க்கரீதியான அடிப்படை உபதேசங்களின் மதிப்பை நாம் ஒப்புமைப்படுத்தி விளக்க முடியும். வேதவாக்கியத்தை நிலமாகவும், மரமாகிய இறையியல் அதிலிருந்து வெளிப்பட்டு வளர்கிறது என்றும் நாம் சிந்திக்கலாம். மரத்தின் தண்டு மற்றும் அதனுடைய பெரிய கிளைகள் மிகவும் அடிப்படையான உபதேசங்களை வர்ணித்துக்காட்டுகின்றன. இவைகள் வேதவாக்கியத்தை மட்டும் சார்ந்தவையாகவும், அடிப்படையாகவும் கொண்டுள்ளன. ஆனால், பெரிய கிளைகள் பல சிறிய கிளைகளாகப் பிரிகின்றன, தர்க்க ரீதியாக பெரிய கிளைகளிலிருந்து அவைகள் தோன்றின என்ற நம்பிக்கையை நோக்கி அவை நகருகின்றன. மேலும் மரத்திலுள்ள இலைகளை நாம் பார்க்கும்போது, சிறிய கிளைகளை அவைகள் சார்ந்திருகின்றன என்ற கருத்துகளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவ்வாறாக நாம் வரைந்து பார்க்கும்போது, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* மதிப்பின் ஆரம்பம் நமக்கு தெளிவாகிவிடுகின்றது. ஒரு இடத்திலுள்ள மரத்தின் உருவத்தை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அறிந்துகொள்வதற்கு, மற்றும் வேதவாக்கியத்தில் வேரூன்றுவதற்கு, முதலாவதாக பெரிய உபதேசங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

இவை இரண்டு காரியங்களை நமக்கு செய்கிறது. முதலாவது, நமது இறையியல் அமைப்புகளில் உள்ள பல வேறுபட்ட நம்பிக்கைகளுக்கு இடையேயான தொடர்பை நாம் கண்டுகொள்ள இது உதவுகிறது. இரண்டாவதாக, நம்முடைய அடிப்படை நம்பிக்கைகளுடன் இந்த சிறிய மையக் கருத்துகளை ஒருங்கிணைக்கும் வழிகளில் வேதவாக்கியத்திலிருந்து விலகியிருக்கும் கோட்பாடுகளைப் பற்றி நாம் சிந்திப்பதற்கு இது உதவுகிறது.

> அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில் காணப்படும் கோட்பாடுகள் கிறிஸ்தவ சத்தியங்களின் சாராம்சத்தை தெளிவாக்குகின்றன. அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின் காலம் என்பது உண்மையில் இரண்டாம் நூற்றாண்டு ஆகும்; இரண்டாம் நூற்றாண்டில் இது எண்ணற்ற அமைப்பைப் பெற்றது; இறுதியாக, நாம் இன்று பயன்படுத்தும் வெற்றியான அமைப்பைப் பெற்றது. மேலும் அங்கே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரித்துவத்தை நீங்கள் கொண்டுள்ளீர்கள். அங்கே நீங்கள் கர்த்தராகிய இயேசுவின் அவதாரம், பரிகார மரணம், வெற்றிகரமான உயிர்த்தெழுதல் மற்றும் எதிர்காலத்தில் அவரது வருகை ஆகியவற்றை கொண்டுள்ளீர்கள். அங்கே பாவத்திற்கான மன்னிப்பை நீங்கள் கொண்டுள்ளீர்கள். கிறிஸ்துவுக்குள்ளாக மறுபடியும் பிறந்தவர்களின் ஐக்கியமாக சபையின் உண்மைத்தன்மையை நீங்கள் கொண்டுள்ளீர்கள். மேலும் சீரான இடைவெளியில் அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கைக்காக வேலை செய்வதும் அவற்றின் உபதேசங்களை முன்னிலைப்படுத்திக் காட்டுவதும் தவிர ஒரு சபைக்கு ஆரோக்கியமான வேறு எதுவும் இருக்க முடியாது என்று நான் நினைக்கிறேன்.
>
> Dr. ஜே. ஐ. பேக்கர்

இப்பொழுது *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* முக்கியத்துவத்தை அதனுடைய அடிப்படை இயல்பின் வாயிலாக நாம் பார்த்து வந்தோம், இந்த போதனைகளின் உலகளாவிய உறுதிப்படுத்தலை விவரிக்க நாம் தயாராக உள்ளோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# உலகளாவிய தன்மை

வெவ்வேறு சாட்சிகள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்த்து சத்தியத்தின் உண்மையை நாம் ஒரு வழியில் தீர்க்கிறோம். சத்தியத்தின் ஒரு கருத்தை அநேக சாட்சிகள் சுட்டிக்காட்டும்போது, அதிகமாக நாம் அதை விசுவாசிப்பதற்கு ஏதுவாகிறது. நல்லது, இதே காரியம் இறையியலுக்கும் உண்மையாகப் பொருந்தும். நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறபடியால், வரலாறு முழுவதுமாக மற்ற ஜனங்கள் எதை விசுவாசித்தார்கள் என்பதையும், அதே போல நவீன உலகில் ஜனங்கள் எதை விசுவாசிக்கிறார்கள் என்பதையும் அறிந்துகொள்வதற்கு இது உதவுகிறது. மேலும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கைக்கு* இது வரும்போது, இதனுடைய கோட்பாட்டுக் கூற்றுகள் எப்பொழுதும் அநேக இடங்களில் அநேக கிறிஸ்தவர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

மூன்று வரலாற்று காலகட்டத்தில், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* இருந்த விசுவாச கட்டுரைகளின் உலகளாவிய இயல்பு எவ்வாறு காணப்பட்டது என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம். முதலாவது, இந்த நம்பிக்கைகள் புதிய ஏற்பாட்டில் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ளன என்பதை நாம் பார்ப்போம். இரண்டாவது, சபை வரலாறு முழுவதுமாக அநேக கிறிஸ்தவர்களால் அவைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நாம் பார்ப்போம். மேலும் மூன்றாவதாக, நிகழ்காலத்தில் அவைகள் தொடர்ந்து சபையை வகைப்படுத்தும் வழிகளை நாம் பார்ப்போம். புதிய ஏற்பாட்டையும் இந்த கோட்பாடுகளின் நிலையான உறுதித்தன்மையையும் நாம் பார்க்கத் துவங்குவோம்.

## புதிய ஏற்பாடு

சபையினுடைய ஆரம்ப நாட்களிலிருந்து, கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களைக் குறித்ததான போதனைகள் மீது கருத்து வேறுபாடுகள் காணப்பட்டு வந்தன. இப்படிப்பட்டதான சில கருத்து வேறுபாடுகள் சபைக்கு புறம்பே இருந்து எழும்பின, அதேவேளையில், மற்றவை சபைக்குள்ளிருந்து உருவாகின. உதாரணமாக, கலாத்தியர் 5 இல் உள்ளபடி, பவுல் அடிக்கடி மனந்திரும்பிய புறஜாதியாரை விருத்தசேதனம் பண்ணும்படி அதிகாரம் செய்த யூத கிறிஸ்தவர்களுக்கு எதிராக எழுதுகிறார். மேலும் 2 பேதுரு 2 இல், பேதுரு சபையில் கள்ள போதகர்களைக் குறித்து எச்சரிக்கிறார். புதிய ஏற்பாடானது, இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் பல்வேறு ஜனங்களின் தவறான கருத்துகளை திருத்துகிறதான உதாரணங்களால் நிறைந்திருக்கிறது.

மேலும் முக்கியமான நம்பிக்கைகள் சந்தேகமடையக்கூடியதாய் இருக்கும்போது சபையில் பிழைகள் காணப்படுவது ஆபத்தானவை. இதன் காரணமாகவே, இயேசு மற்றும் புதிய ஏற்பாட்டின் பிற எழுத்தாளர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இறையியலின் அடிப்படை கருத்துகளின் மீதான பிழைகளைத் திருத்துவதில் கரிசனமுள்ளவர்களாய் காணப்பட்டனர். இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், அவர்கள் அவர்களுடைய திருத்தங்களை வழங்கியபோது, அவர்கள் முற்றிலுமாக ஒருவருக்கு ஒருவர் ஒப்புக்கொண்டனர் என்பதே. இந்த சமயத்தில் பல தவறான போதனைகள் சபைகளில் இருந்தபோதிலும், புதிய ஏற்பாடு அதனுடைய தவறாத உபதேச ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது.

> சபையானது இந்த புத்தகங்களாலான ஒரு நியதியை ஸ்தாபித்தது – இதை ஸ்தாபிப்பதற்கு உண்மையிலேயே சபைக்கு பல நூற்றாண்டுகள் ஆனது, ஆகவே, இது விரைவான செயல்முறை அல்ல – இது சுட்டிக்காட்டுவது என்னவென்றால் சபையினுடைய கருதப்படும் தீர்ப்பாக இங்கே ஒற்றுமையின் அடிப்படை காணப்படுகிறது என்பதே. இது நாம் எளிதில் கடந்து செல்லக்கூடிய கருத்தல்ல, கணிசமான உண்மையாக, கடந்த 2000 வருடங்களாக சபைக்குள் காணப்பட்ட அறிஞர்களின் தீர்ப்பு இது. இன்னும், புதிய ஏற்பாட்டு ஆவணங்களுக்கிடையில் காணப்படுகின்ற ஒற்றுமையின் ஒரு முக்கிய அம்சத்தைப் பற்றி நாம் பேசும்போது, அங்கே கண்ணோட்டங்களுக்கிடையே வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். செயல்படுத்துவதற்குரிய பிரச்சனை என்னவென்றால், கண்ணோட்டங்களின் வேறுபாடுகள் உண்மையில் உபதேசக் கூற்றுகளின் முரண்பாட்டிற்கு வரவில்லை. வெவ்வேறான பார்வைகள், வெவ்வேறான முக்கியத்துவம், உண்மையைப் பற்றிப் பேசுவதற்கான வெவ்வேறான வழிகள், உண்மையினுடைய வெவ்வேறு அம்சங்கள் ஆகியவற்றை நீங்கள் பெறுவீர்கள். ஆனால், இறுதியாக என்னுடைய தீர்ப்பாக, புதிய ஏற்பாடின் பல புத்தகங்களுக்கிடையே, அப்பட்டமான முரண்பாடுகள் எதுவும் இல்லை.
>
> Dr. டேவிட் ஆர். பாவுர்

இந்த ஒற்றுமையின் வெளிச்சத்தில், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பட்டியலிடப்பட்டுள்ள விசுவாச கட்டுரைகளை புதிய ஏற்பாடு உறுதிப்படுத்தும் சமயத்தில், இது உலகளாவிய விதத்தில் செய்யப்பட்டுள்ளது என்பதை நேர்மையாகச் சொல்ல முடியும். இது நிலையாக பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் தெய்வீகத்தன்மையை விவாதிக்கிறது. அதே சமயம் ஒரே தேவன் என்பதையும் வலியுறுத்துகிறது. சுவிசேஷங்கள் கிறிஸ்துவினுடைய கருத்தரித்தல், பிறப்பு, வாழ்க்கை, ஊழியம், மரணம், உயிர்த்தெழுதல் மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரமேறுதல் ஆகிய விசுவாச அறிக்கையின் உண்மைகளை வழங்குகின்றன. மேலும் புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் முற்றிலுமாக விசுவாச அறிக்கையின் சபை மற்றும் இரட்சிப்பு பற்றிய கூற்றுக்களை ஆதரிக்கின்றன.

புதிய ஏற்பாட்டை பார்த்த வண்ணமாக, இந்த நம்பிக்கைகள் சபை வரலாறு முழுவதுமாக கிறிஸ்தவத்தை உலகளாவிய முறையில் எவ்வாறு வகைப்படுத்துகிறது என்பதைப் பார்ப்போம்.

## சபை வரலாறு

புதிய ஏற்பாட்டு சபையைப் போலவே, பிந்தைய நூற்றாண்டு சபையானது பலவகையான இறையியல் கோட்பாடுகளை வெளிப்படுத்தியது. பல சிறிய பிரச்சனைகள் மீது, மிகக் குறைந்த ஒற்றுமையே இருந்தது. ஆனால், *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* காணப்படும் விசுவாச விதிகளைப் போன்ற அதிக மைய உபதேசங்கள், உலகளாவிய விதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டும், உறுதிப்படுத்தப்பட்டும் இருந்தன. மேலும் இந்த அடிப்படை நம்பிக்கைகள் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், சபையும், வரலாறும் அதிக அளவில் எதிர்ப்பாளர்களாகிய கள்ள போதகர்களையும், சபைகளுக்குள் பிளவுகளைத் தூண்டுபவர்களையும் கண்டுள்ளது.

ஒரு எடுத்துக்காட்டாக, கி.பி 4 ஆம் நூற்றாண்டில் நடந்த சம்பவங்களைக் கருத்தில் கொள்ளலாம். *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* ஆரம்பப் பதிப்புகள் இந்த நேரத்தில் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்தன. வரலாற்றின் இந்த காலகட்டத்தில், சபையானது அதன் ஆலோசனை சபையுடன் கையாண்டதான அநேக மார்க்க பேதங்கள் எழும்பின. அவற்றுள் சில உள்ளூர் ஆலோசனை சபைகளாக இருந்தன, ஆனால் மற்றவைகள் உலகளாவியதாகக் கருதப்பட்டன, ஏனென்றால் அவைகள் உலகெங்கிலுமுள்ள பெரும்பாலான சபைகளிலிருந்து ஆயர்களை உள்ளடக்கியிருந்தன. உதாரணமாக, கி. பி. 325 இல் நிசியா ஆலோசனை சபை மற்றும் கி .பி. 381 இல் கான்ஸ்டாண்டிநோபிள் ஆலோசனை சபை ஆகியவை உலகளாவிய ஆலோசனை சபையாக *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* விசுவாச விதிகளுக்கு தொடர்புடைய அநேக பிரச்சனைகளைக் கையாண்டன.

நவீன *நிசியா விசுவாச அறிக்கையானது* முதற்கட்டமாக கி .பி. 325 இல் நிசியா ஆலோசனை சபையில் வரையறை செய்யப்பட்டது, மேலும் இது அதனுடைய நவீன வடிவமைப்பை கி. பி. 381 இல் கான்ஸ்டாண்டிநோபிள் ஆலோசனை சபையில் எட்டியது. இது *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையின்* மீதான பெரிதளவிலான விரிவாக்கமும் விளக்கமும் ஆகும், இந்த விசுவாச அறிக்கையைத் தவறாக வியாக்கியானம் செய்வதை மறுக்கும் பொருட்டு இதனுடைய அநேக கருத்துக்களைத் தெளிவுபடுத்தும் நோக்கத்துடன் இது காணப்பட்டது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உதாரணமாக, ஞானவாதம் என்கிற மார்க்கபேதம் இந்த உலகத்தை சிருஷ்டித்தவரான வேதாகமத்தின் தேவன் வேறொரு தேவனால் படைக்கப்பட்டுள்ளார் என்று போதித்தது. ஞானவாதம் போன்ற மார்க்கபேதங்கள் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையால்* வெளிப்படையாக கடிந்துகொள்ளப்படவில்லை, ஆகவே, *நிசியா விசுவாச அறிக்கையானது அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* நோக்கத்தை அதிகத் தெளிவாக்கும் விதமாக சில காரியங்களை அதனோடு சேர்த்தது.

*குறிப்பாக, அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* சாதாரணமாக "நான் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவராகிய சர்வவல்ல பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்" என்று சொல்லும் இடத்தில், *நிசியா விசுவாச அறிக்கையானது* "நாம் காணக்கூடியதும் காணக்கூடாததுமான சகலத்தையும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவரும், சர்வவல்ல பிதாவுமாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறோம்" என்கிற *இந்த* விரிவுபடுத்தப்பட்ட அறிக்கையை வழங்கியது:. நான்கு காரியங்களை இங்கே கவனியுங்கள்:

முதலாவது, *நிசியா விசுவாச அறிக்கையானது, அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையை* அடிப்படையாகக் கொண்டுள்ளது. *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* அவர்களுடைய சொந்த விசுவாச அறிக்கையின் அடித்தளமாகக் கொண்டு, உலகளாவிய நிசியா ஆலோசனை சபையானது, சபை *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* உலகளாவிய ரீதியில் உறுதிப்படுத்தினதை வெளிக்காட்டியது.

இரண்டாவது, *நிசியா விசுவாச அறிக்கையானது,* "நான்" என்ற வார்த்தை இருக்கும் இடத்தில் "நாம்" என்ற வார்த்தையுடன் துவங்குகிறது. *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையானது* ஞானஸ்நானத்தில் தனிநபர்களின் விசுவாச அறிக்கையை நோக்கமாகக் கருதுகின்ற இடத்தில், *நிசியா விசுவாச அறிக்கையானது* உலகளாவியதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான சபையாக இதே உபதேசங்களை ஒப்புக்கொண்டிருக்கிற ஒரு அறிக்கையாகக் காணப்படுகிறது.

மூன்றாவதாக, *நிசியா விசுவாச அறிக்கையானது* "ஒரே" என்ற வார்த்தையை "தேவன்" என்ற வார்த்தைக்கு முன்பாக சேர்த்ததின் மூலமாக ஒரு தெளிவை வழங்குகிறது. இது *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கை* தேவன் ஒருவரே என்பதை சுட்டிக்காட்டியதை வெளிப்படையாகத் தெரிவித்தது.

மேலும் நான்காவதாக, *நிசியா விசுவாச அறிக்கையானது* தேவன் கண்களுக்குத் தெரியாத, ஆவியாக இருக்கக்கூடியதான காரியங்களையும் உள்ளடக்கிய சகலத்தையும் சிருஷ்டித்தார் என்ற தெளிவை வழங்குகிறது. இது தேவனை யாரும் சிருஷ்டிக்கவில்லை என்று தெளிவுபடுத்துகிறது. மீண்டுமாக, *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கை* சுட்டிக்காட்டுகிற இந்த விஷயத்தை, *நிசியா விசுவாச அறிக்கை* சாதாரணமாகத் தெளிவுபடுத்துகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இவ்விதமான உறுதிப்பாடுகளும் தெளிவுகளும் மற்ற ஆலோசனை சபைகள் மற்றும் இறையியல் வல்லுநர்களால் நூற்றாண்டுகளாக தொடர்ந்து வழங்கப்பட்டு வந்தன. இந்த சமயத்தில், ஆலோசனை சபைகளின் தீர்மானங்களை சபைகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு ஆலோசனை சபையானது சில சபைகளினுடைய கருத்துகளை கண்டித்தது; மற்ற ஆலோசனை சபைகள் மற்ற சபைகளினுடைய கருத்துகளை கண்டித்தன. ஆனால் அநேக காரியங்களில், இரண்டு பக்கங்களிலும் காணப்பட்ட கருத்து மாறுபாடுகளின் மத்தியிலும் சபையானது *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையின்* அடிப்படை கொள்கைகளைத் உறுதிப்படுத்துவதைத் தொடர்ந்தது.

இதன் காரணமாக, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* கிறிஸ்தவ விசுவாசத்தின் மிகவும் அடிப்படையானதாகவும் மிக முக்கிய உலகளாவிய அறிக்கையாகவும் பொதுவாகப் பார்க்கப்பட்டது. *நிசியா விசுவாச அறிக்கை* மட்டுமே *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையை* வரலாறின் ஊடாக உலகளாவிய ஏற்றுக்கொள்ளுதல் என்னும் அடிப்படையில் அணுகியது. ஆனால் *நிசியா விசுவாச அறிக்கை* என்பது அடிப்படையைப் போன்றது அல்ல. இறையியல் வல்லுநர்கள் கூட அடிக்கடி தவறாகப் புரிந்துகொள்ளக்கூடியதான அநேக இறையியல் கூற்றுக்களை இது உள்ளடக்கியுள்ளது. இதன் காரணமாகவே, நாம் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையை* கிறிஸ்தவ விசுவாசத்தின் மையக் கோட்பாடுகள் பற்றிய இந்த ஆய்வுக்கு அஸ்திபாரமாகத் தெரிந்துகொண்டுள்ளோம்.

இதுவரை, நாம், *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையுடன்* புதிய ஏற்பாட்டின் உலகளாவிய ஒப்புதலைச் சுட்டிக்காட்டியுள்ளோம், மேலும் சபை வரலாறு முழுவதும் இதனுடைய கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதைக் குறிப்பிட்டுள்ளோம். இதே நம்பிக்கைகள் இன்னும் கிறிஸ்தவ சபையை வகைப்படுத்துகின்றன என்பதைக் குறிப்பிட்டு, நிகழ்காலத்தைப் பற்றிப் பேச இப்பொழுது நாம் தயாராக உள்ளோம்.

## நிகழ்காலம்

எல்லா காலத்திலும், சபையானது நூற்றாண்டுகளாக கொண்டிருக்கும் அடிப்படை நம்பிக்கைகளை கள்ள போதகர்கள் மறுத்து வருகிறார்கள். இந்த நவீன உலகத்தில், யெகோவா சாட்சிகள், மார்மன்கள் போன்ற அடிப்படை விசுவாசங்களைப் புரட்டும் வேதப்புரட்டர்களாகிய சமய மரபினர் தங்களை கிறிஸ்தவர்களாகக் கருதுகின்றனர், ஏனென்றால் அவர்கள் வேதாகமத்தை ஏற்றுக்கொள்கிறார்கள் மற்றும் ஏதோவொரு முறையில் கிறிஸ்துவை பின்பற்ற முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல ஏனென்றால் அவர்கள் இரண்டாயிரம் வருடங்களாக கிறிஸ்தவத்தினுடைய எல்லையாக வரையறுக்கப்பட்டிருக்கும் அடிப்படை நம்பிக்கைகளை மறுதலிக்கிறார்கள் – *அப்போஸ்தலர்களினுடைய விசுவாச*

*அறிக்கையின்* விசுவாச விதிகளில் காண முடிகின்றதான நம்பிக்கைகள் என்பதே அது. கிறிஸ்தவ சபைகளுக்குள்ளேயே குறிப்பிடத்தக்க தனிப்பட்ட போதகர்கள் செய்வதுபோன்று, வேதப்புரட்டர்களாக அறிந்துகொள்ளப்படாத சில சபைகள் கூட அடிப்படை போதனைகளை மறுதலிக்கின்றன.

ஆனால் அநேக ஜனங்கள் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* பட்டியலிடப்பட்டுள்ள கோட்பாடுகளை நிராகரிப்பார்களானால், இந்த விசுவாச அறிக்கையானது, உலகளாவிய முறையில் சபையை இன்றைய காலகட்டத்தில் வகைப்படுத்துகிறது என்று எவ்வாறு கூற முடியும்? நல்லது, இதன் பதில் இருமடங்கு ஆகும். ஒன்று, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற, பெரும்பாலான சபைகள் இந்த கோட்பாடுகளை உறுதிப்படுத்துகின்றன. பாப்டிஸ்டுகள், மெத்தடிஸ்டுகள், லுத்தரன்கள், ஆங்கிலிக்கன்கள், பிரஸ்பிட்டீரியன்கள், இன்னும் பல விதமான பாரம்பரிய மற்றும் புராட்டஸ்டண்டு சபைகளால் அவைகள் போதிக்கப்பட்டும், விசுவாசிக்கப்பட்டும் வருகின்றன. அவைகள் புராட்டஸ்டண்டு அல்லாத ரோம கத்தோலிக்க சபை மற்றும் கிழக்கு ஆர்த்தோடாக்ஸ் சபை போன்ற பெரிய அளவிலான சபைகளாலும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

இதைத் தவிர, இந்த கோட்பாடுகளை மறுதலிக்கிற சபைகள் அநேகமாக “கிறிஸ்தவ சபைகள்” என்று அழைக்கப்படக்கூடாது. அவர்கள் வேதாகமத்தை ஆதரிக்கிறவர்களாக இருந்தாலும், கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகக் கூறினாலும் அவர்கள் உண்மையில் வேதவாக்கியத்தின் போதனைகளையோ வரலாற்று சபையையோ ஆதரிக்கவில்லை. அதன் காரணமாக, அவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல.

> உதாரணமாக, அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உபதேசங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி நீங்கள் சிந்திக்கும்போது, இந்த விஷயங்கள் சபையினுடைய வாழ்வுக்கும், சுவிசேஷத்தின் இயல்பைப் பற்றிய புரிதலுக்கும் மற்றும் கிறிஸ்துவுக்குள் நமது சொந்த இரட்சிப்பைப் பற்றிய புரிதலுக்கும் முற்றிலும் அவசியமானவை. உதாரணமாக, விசுவாச அறிக்கையானது பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன் என்கிற தேவனுடைய திரித்துவ இயல்பை நமக்கு அறிவிக்கிறது. ஆகவே, நாம் கிறிஸ்தவராக இருக்க வேண்டுமென்றால், திரித்துவத்தைப் பற்றிய உபதேசமானது நமது விசுவாசத்தின் மீது சிறிது கூடுதலாக அழகாக பூசப்பட்ட ஒரு விஷயம் என்று நாம் பாசாங்கு செய்ய முடியாது. அதற்குப் பதிலாக, திரித்துவத்தைப் பற்றிய உபதேசமானது உண்மையிலேயே நம்முடைய தேவன் அவருடைய சாராம்சத்தில் யார் என்பது பற்றிய ஒரு அறிக்கையாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

Dr. ஸ்டீவ் ப்ளாக்மோர்

அப்போஸ்தலர்களுடைய விசுவாச அறிக்கையில் காணப்படும் உபதேசங்கள் கிறிஸ்தவத்திற்கு அவசியமானதும், அடிப்படையானதுமாகும் என்று நான் சொல்கிறேன். மேலும் உண்மையிலேயே, நீங்கள் அவற்றிலிருந்து உங்கள் மனதை மாற்றுவீர்கள் என்றால், நீங்கள் வரலாற்றுக் கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து விலகிச்செல்கிறீர்கள். இதுதான் ஆதி சபையின் அனுபவங்கள், அவர்கள் வேதாகமத்தை வியாக்கியானம் செய்ய பல்வேறு வழிகள் அங்கே இருப்பதைக் கண்டுபிடித்தார்கள், மற்றும் “இது தான் சரியான வழி” என்று அவர்கள் கூறினார்கள். இது ஒரு இரயில் தண்டவாளத்தைப் போன்றது: “இதுதான் வேதத்தை வியாக்கியானம் செய்ய வேண்டிய சரியான தடம்.” இந்த வழியாகச் செல்லுங்கள் ஏனென்றால் நீங்கள் அடிப்படை கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து விலகிச் செல்கிறீர்கள். ஆகவே தான், அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது, உண்மையான வேதாகம விசுவாசத்தின் அடிப்படை இயல்பை வரையறுக்கிறது என்று நான் நினைக்கிறேன்.

Dr. பீட்டர் வாக்கர்

*அப்போஸ்தலர்களினுடைய விசுவாச அறிக்கையில்* சுருக்கமாகக் கூறப்பட்ட நம்பிக்கைகள் அடித்தளமாகவும், உலகளாவியதாகவும் இருப்பதால், அவைகள் விசுவாசிகளிடையே ஒன்றுபடுத்தும் தாக்கத்தை தொடர்ந்து செலுத்துகின்றன. இது இந்நாட்களில் குறிப்பிடத்தக்க அளவில் மதிப்புடையது, ஏனென்றால், நவீன சபையில் மிக அதிகமான பிரிவுகள் காணப்படுகின்றன.

## ஒன்றிணைத்தல்

ஒருவேளை நீங்கள் இறையியலைக் கற்பதற்குத் தடைசெய்கிற உண்மையுள்ள கிறிஸ்தவர்களைச் சந்தித்திருக்கலாம் ஏனென்றால் உபதேசங்கள் தான் கிறிஸ்தவர்களை ஒருவருக்கொருவர் எதிரானவர்களாகப் பிரிக்கிறது என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். “இயேசு நம்மை இணைக்கிறார், ஆனால் உபதேசங்கள் நம்மைப் பிரிக்கிறது” என்பது போன்ற கோஷங்களைச் சொல்லி முறையான இறையியலுக்கு இந்த எதிர்ப்பைப் பரப்புகிறார்கள். மேலும் இந்த நிலையில் ஒரளவு உண்மை இருக்கிறது. கிறிஸ்தவர்கள் காலம் காலமாக ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்திருக்கிறார்கள், ஒருவருக்கொருவர் கண்டனம் செய்து

கொள்கிறார்கள், ஒருவரையொருவர் துன்புறுத்துகிறார்கள் மற்றும் உபதேசங்களின் விஷயங்களுக்காக யுத்தங்களை நடத்துகிறார்கள். அப்படியிருந்தும், புதிய ஏற்பாடானது, உபதேசங்களின் ஒற்றுமைக்காக பாடுபடும்படியாக சபைகளை இன்னமும் உற்சாகப்படுத்துகிறது. உதாரணமாக, எபேசியர் 4:11-13 இல் இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் … [இயேசு] ஏற்படுத்தினார் (எபேசியர் 4:11-13).

இந்தப் வேத பகுதியில், பவுல் சபையை இயேசுவின் சரீரமாகக் குறிப்பிடுகிறார். மேலும் நாம் விசுவாசத்திலும், ஞானத்திலும் ஒன்றுபடாத வரையில், சபையானது கிறிஸ்துவுக்குள்ளான முதிர்ச்சியை அடையாது என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். இதன் காரணமாக, உபதேச ஒற்றுமை என்பது ஒவ்வொரு சபையின் இலக்காக இருக்க வேண்டும்.

உண்மையில், கிறிஸ்தவ வாழ்க்கையின் மற்ற அம்சங்களும் உபதேசங்கள் மீதான நமது கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தேவனையும் நமது அயலாரையும் நேசித்தல், பரிசுத்தத்தை அடைய முயற்சி செய்தல், பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையைச் சார்ந்திருத்தல், தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் தியானித்தல் போன்ற சில காரியங்களை நாம் செய்ய வேண்டும். உபதேசங்கள் மீது மட்டும் கவனம் செலுத்திவிட்டு, மற்ற காரியங்களை நாம் அலட்சியம் செய்யும்போது, நாம் அடிக்கடி மிக மோசமாக வழி தவறி விடுவோம்.

1 கொரிந்தியர் 13 : 2 இல் அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிப்பது போல:

> நான் … தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும் …. அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை (1 கொரிந்தியர் 13:2).

இந்த வசனம் மற்றும் மற்ற அநேக வசனங்கள் சுட்டிக்காட்டுவதுபோல, இறையியல் ஞானத்தை சம்பாதிப்பது முக்கியம்தான், ஆனால் அது கிறிஸ்தவ விசுவாசத்தின் சிறந்த நன்மை அல்ல.

இறையியல் சர்ச்சைகளின் அழிவுக்கேதுவான விளைவுகளைத் தவிர்ப்பதற்கான மிகவும் திறன்வாய்ந்த வழிகளில் ஒன்று உலகெங்கிலுமுள்ள கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுடன் நாம் பகிர்ந்து கொள்ளும் உபதேச ஒருமைப்பாட்டின் மகிழ்ச்சியேயாகும். இறையியலின் விவரங்களுக்கான நமது கரிசனையை, ஒருமைப்பாட்டிற்கான சரியான கரிசனையுடன் நாம் சமநிலைப்படுத்தும்போது, உபதேசங்கள் உண்மையில் நம்மைப் பிரிப்பதற்குப் பதிலாக நம்மை ஒன்றுசேர்க்கும்.

> இயேசு கிறிஸ்துவினுடைய சபையானது இன்றைய நாட்களில் ஒருமைப்பாட்டைக் குறித்து முழுமையாக கரிசனை கொண்டுள்ளது. நம்மிடையே அதிகமான பிரிவுகள் உள்ளன மற்றும் பரிசுத்த ஆவியானவர், பெண்கள் மற்றும் ஞானஸ்நானத்தின் மீது வெவ்வேறு விதமான கண்ணோட்டங்களைக் கொண்டுள்ளோம். இருப்பினும், இன்று, இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் சத்தியத்தின் அடிப்படையில் அல்லாமல் செயலின் அடிப்படையில் ஒன்று சேர்வதிலும் உலகை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துவதிலும் அதிக கரிசனை கொள்வதாகத் தோன்றுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவும், அப்போஸ்தலனாகிய பவுலும், ஒற்றுமையைப் பற்றி சிந்திக்கும்போது ஒரே தேவன், ஒரே கர்த்தர், ஒரே ஆவி, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் நமக்கு இருப்பதால், நாம் கொண்டிருக்கும் ஒற்றுமையைப் பற்றி அவர்கள் சிந்திக்கிறார்கள் என்பது சுவாரஸ்யமானது. சுவிசேஷ புத்தகமாகிய யோவான் 17 மற்றும் எபேசியர் 4 யை நான் நினைத்துப்பார்க்கிறேன். ஆகவே, நாம் விசுவாசிக்கிற சத்தியங்கள் அல்லது சத்திய கோட்பாடுகள் இதுதான், அது கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டிருக்கும் ஒற்றுமையின் அஸ்திபாரமாக இருக்க வேண்டியது அவசியம்.
>
> Dr. சாமுவேல் லிங்

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* வெளிப்படுத்தப்பட்டுள்ள வேதாகமத்தின் மைய போதனைகளுக்காக உறுதியாக நிற்கிறவர்களாகிய, கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றுகிற பல லட்சக் கணக்கான நபர்கள் உலகமெங்கிலும் காணப்படுகிறார்கள். உண்மையில், இந்தத் தருணத்தில் எண்ணற்ற கிறிஸ்தவர்கள் இந்த அர்ப்பணிப்புக்காக துன்புறுத்தல்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனுபவிக்கிறார்கள், இரத்த சாட்சிகளாகக் கூட மரிக்கிறார்கள். எண்ணற்ற பிற இறையியல் பிரச்சனைகள் குறித்து அவர்கள் நம்முடன் உடன்படாமல் இருக்கலாம். உண்மையில், நீங்களும் நானும் நெருக்கமாகக் கொண்டிருக்கிற கருத்துகளை அவர்கள் உறுதியாக எதிர்க்கலாம். நம்மிடத்தில் வேறுபாடுகள் இருந்தாலும், விசுவாச அறிக்கையானது தேவனைப் பற்றி, சபையைப் பற்றி, இரட்சிப்பைப் பற்றி சொல்கின்ற காரியங்களில் நாம் இணைந்து நிற்கிறோம். யோவான் 17:23 இல் இயேசு சபைக்காக ஜெபித்ததை நினைவு கூறுவோம்.

> ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:23).

சபையில் காணப்படும் ஒருமைப்பாடு தான் அவர் பிதாவால் அனுப்பப்பட்டவர் என்பதற்கான சான்று என்று இயேசு சொன்னதைக் கவனியுங்கள். கிறிஸ்துவைப் பின்பற்றும் மற்றவர்களோடு நாம் தோளோடு தோள் சேர்த்து நிற்கும்போது, இறையியல் ரீதியாக நாம் பொதுவாகக் கொண்டுள்ளதை வலியுறுத்தி, சுவிசேஷம் உண்மை என்பதை உலகிற்கு சாட்சியாகக்கூறுகிறோம், மற்றும் இது நமது சுவிசேஷத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.

> சுவிசேஷத்தை வரையறுத்தும், அதை பொதுவான அடிப்படையில் ஒப்புக்கொண்டும் உள்ளதால், ஒருமைப்பாட்டையும், சத்தியத்தையும் தொடர்ந்து அடையக்கூடிய ஒரு வழியாக நான் நினைப்பது, சுவிசேஷத்தில் நாம் கொண்டிருக்கும் ஒற்றுமைக்கு நாம் அர்ப்பணிப்புள்ளவர்களாக இருக்கிறோம் என்று சொல்வதே, அதாவது, சத்தியத்தைப் பற்றிய நமது நம்பிக்கையைக் கைவிடும்படி ஒருவருக்கொருவர் கேட்காத விதத்தில், வாழ்க்கையிலும் ஊழியத்திலும் ஒருவருக்கொருவர் ஒருமைப்பாட்டை தொடர்ந்து கொண்டிருப்பதுதான். ஆனால், உண்மையில் நாம் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்ற பகுதிகளைக்கூட கொண்டாடுகிறோம். நாம் ஒருவருக்கொருவர் மதிப்புடன் வேறுபடுகிறோம். நாம் ஒருவருக்கொருவர் புத்திசாலித்தனத்துடன் வேறுபடுகிறோம். நாம் ஒருவருக்கொருவர் அன்புடன் வேறுபடுகிறோம். ஆனால், நாம் சத்தியத்திலும், ஏற்றுக்கொள்ளும் அளவிலும் பரஸ்பர மகிழ்ச்சியை நாம் கொண்டிருக்கும்படியான காரியங்களை நாம் ஒருவருக்கொருவர் தேடுகிறோம். மேலும்

> குறிப்பிட்ட எல்லைவரை அந்த காரியங்களை நாம் கொண்டாடுகிறோம், அப்பொழுது தான் ஒருமைப்பாடானது அனுபவிக்கப்படும் மற்றும் நம்முடைய இறையியல் நம்பிக்கையின் பிற பகுதிகளில், முறையான, மனசாட்சியுள்ள வேறுபாடுகளை நாம் கொண்டிருக்கவும் முடியும்.
>
> Dr. ஜே. லிகோன் டங்கன் III

இரண்டாம் நிலை முக்கியத்துவம் வாய்ந்த நம்பிக்கைகளுக்கும் அத்தியாவசிய நம்பிக்கைகளுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டுபிடிப்பதற்கு எல்லா இடங்களிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கு *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* உதவும். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், சபையின் கூட்டு வாழ்க்கையிலும் இந்த விசுவாச அறிக்கையை நாம் வலியுறுத்தும்போது, இறையியல் நம்மை ஒருவருக்கொருவர் பிரிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைக் காண்போம். அதற்கு பதிலாக, கிறிஸ்துவின் மற்ற உண்மையுள்ள ஊழியர்களுடன் நாம் ஒன்றுபடுவதையும், அதன் மூலம் அவருடைய சபைக்கான இயேசுவின் தரிசனத்தை நிறைவேற்றுவதையும் காண்போம்.

# முடிவுரை

*அப்போஸ்தலர்களுடைய விசுவாச அறிக்கையின்* விசுவாசக் கட்டுரைகளை அறிமுகப்படுத்தும் இந்த பாடத்தில், விசுவாச அறிக்கையின் வரலாறை அதன் வளர்ச்சி மற்றும் நோக்கத்தின் அடிப்படையில் பேசினோம். தேவன், சபை மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அதன் உபதேசங்களின் கண்ணோட்டத்தை நாம் வழங்கியுள்ளோம். விசுவாச கட்டுரைகளின் முக்கியத்துவத்தை அவற்றின் அடித்தள, உலகளாவிய மற்றும் ஒன்றிணைக்கும் தன்மையின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளோம்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* என்பது மிக முக்கியமான வரலாற்று ஆவணமாகும், இது மைய கிறிஸ்தவ நம்பிக்கைகளை நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சுருக்கமாகக் கூறியுள்ளது. இன்றும் கூட, ஒவ்வொரு சபை பிரிவிலும் இருக்கிற கிறிஸ்தவ இறையியலாளர்களுக்கு ஒரு ஒருங்கிணைந்த தொடக்க புள்ளியை அது தொடர்ந்து அளித்து வருகிறது. இந்தத் தொடரில் வரும் பாடங்களில், உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவ போதனையை ஒன்றிணைக்கும் வேத சத்தியங்களை அவை எவ்வாறு உருவமைக்கின்றன என்பதைப் பார்ப்பதன் மூலம், *அப்போஸ்தலர்களின்*



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

*விசுவாச அறிக்கைக்கையில்* உள்ள விசுவாசக் கட்டுரைகளை விரிவாக ஆராய்வோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.